THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE FOR THE CITIZEN

652

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1951
MADRAS

652/52

1717

இந்த இதழில்

உங்கள் 'வோட்' யாருக்கு ?

ஜனப்பிரதி நிதிச் சட்டம்
தேர்தல் விஷயங்கள்

அறநிலையப் பாதுகாப்புச் சட்ட
நடவடிக்கைகள் விபரம்

இரண்டு பாகஸ்தர்களுக்குச்
சொந்தமான பொதுக் கிணறு

பாலிய விவாகத்திற்காக கொடுக்
கப்பட்ட கடன் செல்லுமா?

கமிஷன் ஏஜண்டுகளும்
விற்பனை வரிச் சட்டமும்

கேள்வி - பதில்

கண்ட்ரோல்

விபரம் உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE "VAKIL" ~ நவம்பர்-1951 ~ 4 அணா

PATENT REGISTERED NO. 27878.

ரோலிங் ஸ்டோன்.

தண்ணீரில் ஊரவைத்த தானியங்களைக் கைபடாமல் மாவாக
அரைக்கும் எலெக்டிரிக் கல் உரல்.

ஓரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங்

சிறந்த சிற்றுண்டி உயர்ந்த உணவு திருப்தியான கவனிப்பு
தங்குவதற்கு வசதியான அறைகளுடன் உள்ளது.

புரொப்ரைட்டர்ஸ்:

A. V. சக்கிரவர்த்தி அய்யங்கார் (A. R. V. Son.)

ஓரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங் & ரோலிங்ஸ்டோன்
தயாரிப்பாளர்கள்.

மாயவரம் ஜங்ஷன்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர் :-

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்.

ஸ்தாபிதம் 1942 தந்தி "லலிதாலயா"

உயர்தர ஆயுர்வேத சிகித்சைக்கும்
மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்	பிராஞ்ச
49, மூர்த்தி செட்டித் தெரு.	78, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு

நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் [Regd.]

TRADE MARK

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப்பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கை கால்வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டி, சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

1 சேர் ரூ. 4—8—0 ½ சேர் ரூ. 2—4—0.

வி. பி. பி. செலவு தனி.

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்.

தயாரிக்குமிடம் :—

ஜெயராம் வைத்தியசாலை

28, காசிவிஸ்வநாதர் மேலவீதி, கும்பகோணம்

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா	ரூ.	3—0—0
விசேஷ வருட சந்தா	ரூ.	6—0—0
ஷை வெளிநாடு	ரூ.	10—0—0
ஆயுள் சந்தா	ரூ.	100—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர் களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ் களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்ட வேண்டியதில்லை. அவர்களுக்கு "வக்கீல்" இதழ்களும், வருட முடிவில் சேர்த்து பைண்டு செய்யப் பொருள் அட்டவணையும், "வக்கீல்" சப்ளிமெண்டுகளாகப் பிரசுரம் செய்யப் படும் எல்லாப் புத்தகங்களும் அவ்வப்பொழுது அனுப்பிக்கொண்டு வரப்படும். "வக்கீல்" பத் திரிகையின் சந்தா இனி உயர்த்தப்பட்டா லும், அல்லது "வக்கீல்" மாதம் இருமுறை அல்லது வாரப் பத்திரிகையாகச் செய்யப்பட்டா லும், ஆயுள் சந்தாதாரர்கள் புதிய கட்டணம் கட்டவேண்டியதில்லை. ஆயுள் சந்தாதாரர் களாகச் சேரவிரும்பும் அன்பர்கள் அது சம்பந்த மான விவரங்களையும் அவர்களுக்குள்ள மற்ற சலுகைகளையும் தெரிந்துகொள்ள நேரில் "வக்கீல்" காரியாலயத்திற்கு எழுதவும்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 நவம்பர் 1951 இதழ் 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 28 NOV

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும்—செய்திகளும்	
உங்கள் 'வோட்' யாருக்கு?	3
புதிய சட்டங்கள்	4
கண்ட்ரோல் விதிகள்	6
சட்டங்களை அனுசரித்து செய்யப்படும் விதிகள்	
கூட்டுறவு சங்க விதிகள் திருத்தம்	6
கிராம பஞ்சாயத்து சட்ட விதிகள்	6
சிவில் வழக்கு முறை புதிய விதிகள்	7
தேர்தல் [எலெக்ஷன்]	
ஜனப்பிரதிநிதிச் சட்டம் (1951)	8
அறநிலையப்பாதுகாப்புச் சட்ட நடவடிக் கைகள் விபரம்	13
வழக்கும்—தீர்ப்பும்	
* இரண்டு பாகஸ்தர்களுக்குச் சொந்த மான பொதுக் கிணறு	20
* கணவன் இறக்கும்போது விபசார வாழ்க்கையிலிருக்கும் மனைவிக்கு சொத்து பாத்தியம் உண்டா?	20
* பாலிய விவாகத்திற்காக கொடுக்கப் பட்ட கடன் செல்லவில்லை	21
* விற்பனை வரிச் சட்டமும் கமிஷன் ஏஜண்டுகளும்	22
கேள்வி—பதில்	23

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)

—என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

187713

"வக்கீல்" தேர்தல் மலர்

அடுத்த மாத "வக்கீல்" இதழ்—அதாவது 1951 டிசம்பர் 1-ம் தேதி பிரசுரமாகும் "வக்கீல்" இதழ்—தேர்தல் விசேஷ மலராகப் பிரசுரம் செய்யப்படும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்; பார்லிமெண்ட்; சட்டசபைகள்; சர்க்கார்; நீதி மன்றங்கள்; ஜீவாதார உரிமைகள்; ஜனப்பிரதிநிதிச்சட்டங்கள்; தேர்தல் விதிகள்; தேர்தல் தொகுதிகள்; 'வோட்டர்கள்' கவனிக்கவேண்டிய விதிகள்; தேர்தல் ஊழல்கள்; தேர்தல் குற்றங்கள்; தேர்தல் சின்னங்கள் போன்ற இன்னும் பலபல விஷயங்கள் பற்றிய சட்ட நுட்பங்கள் அடங்கிய ஓர் அறிவு விருந்தாகவே இவ்விதழ் அமையும். அதிக பக்கங்கள் இருக்கும். **தனிப் பிரதி விலை அணா 6.** வருட சந்தாதார்கள் அல்லாதவர்களும் தேவையான பிரதிகளுக்கு 15—11—1951-க்குள் முன் பணம் அனுப்பினால் பிரதிகள் தபாலில் அனுப்பப்படும்.

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, :: கும்பகோணம். (தென் இந்தியா)

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B:-(1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் PO. S. A. Dt.

குறைந்த விலை! நிறைந்த சுகம்!!
எல்லா வாய்வுகளையும் கண்டிப்பது
மிஸ்க்காய லேகியம்
டிரேட் மார்க்கு ரிஜிஸ்டர் No. 222.
T. K. S. பவான்சங்கர் Co.,
27, தாடாளங்கோவில்,
சீர்காழி.

தமிழில்
விற்பனை வரி

தனிப்பிரதி
விலை ரூபாய் 2—0—0
(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

தனிப்பிரதி தேவையானால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 2—8—0 அனுப்பினால் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
மானேஜர்
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ.	60
ஷை .. அரைப் பக்கம்	ரூ.	35
ஷை .. கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் - அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 நவம்பர் 1951 இதழ் 11

குறிப்புகளும் - செய்திகளும்

உங்கள் 'வோட்' யாருக்கு?

வரப்போகும் பொதுத் தேர்தலில் நீங்கள் எந்த அபேட்சகருக்கு உங்கள் வாக்கை அளிக்கப் போகின்றீர்கள்—எந்தக் கட்சியை ஆதரிக்கப் போகின்றீர்கள்- என்ற கவலை "வக்கீலு"க்குக் கிடையாது. "வக்கீல்" எந்தக் கட்சியையும் சேர்ந்ததல்ல. ஆனால் இரண்டு விஷயங்களில் "வக்கீல்" தன் அபிப்பிராயத்தை வெளியிட்டுக் கொள்ள உரிமை உண்டு.

முதலாவதாக: நீங்கள் யாருக்கு உங்கள் "வோட்டை" ப் போட்டாலும் போடா விட்டாலும், ஓர் வகை அபேட்சகருக்கு மட்டில் நீங்கள் உங்கள் ஆதரவை அளிக்கக் கண்டிப்பாய் மறுக்க வேண்டும். அவர் யார் தெரியுமா? அவர்தான் இந்தியாவைப் பாழாக்கிவரும் ஓர் வகை 'கனவான்'. அவர்தான் மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடுப்பின்றி வாடும் காலத்தைச் சிருட்டித்தும். தாமே அதைப் பயன்படுத்திக் கொண்டும் வரும் 'பெரிய மனிதர்'. அவர்தான் பொது மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களைப் பதுக்கிப் பதுக்கி, கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்யும் 'சீமான்'. அவர்தான் சட்டங்களையும் சட்டத்தை அமுல் நடத்துவோரையும் விலைக்கு வாங்கி, சுதந்தர இந்தியாவில் தாம் மட்டில் சுதந்தர சுய வாழ்க்கை நடத்தும் ஒரு புது வகை இந்தியன். இவர் இப்பொழுது எவ்வளவு பணக் குவியல்களில் புரண்டு வந்தாலும் சரி; இவர் இப்பொழுது தேர்தலுக்காக மாட்டிக் கொண்டிருக்கும் சட்டையின் நிறம் தூய வெள்ளையாக இருந்தாலும் சரி; சிகப்பு அல்லது கறுப்பாகவோ வேறு எந்த நிறமாகவோ இருந்தாலும் சரி, இவரை அடையாளம் கண்டு பிடித்து, அவரை ஒதுக்குங்கள். இவர் எந்தக் கட்சியைத் தம் ஏணியாக வைத்துக்கொண்டு மேலே ஏறினாலும் இது உங்களை இன்னும் கேவலமான நிலைமைக்குக் கொண்டு வரத்தான் செய்யும் என்பது திண்ணம். இவருக்கு ஒரு பதவி வந்தால், மக்கள் அழிவார்கள். இவர் இந்நாட்டையும் விற்கப் பேரம் செய்வார். யுத்தத்தில் பிறந்த இவரை மக்கள் யுத்தம் செய்துதான் அழிக்கவேண்டும். இப்பொழுதுத் தேர்தல்தான் அவர் மீது மக்கள் தொடுக்கும் யுத்தம். இவரை மட்டில் நீக்கி, நீங்கள் எந்தக் கட்சிக்கு, 'வோட்' போட்டாலும்: எந்தக் கட்சியையும் சேராத ஓர் சுயேச்சை அபேட்சகருக்கு உங்கள் 'வோட்'டைப் போட்டாலும் பாதகமில்லை. இவர் தம்முடன் போட்டியிடுபவர்களையும் விலைக்கு வாங்கி, தேர்தல் இல்லாமலே உங்கள் தயவு இல்லாமலே பதவியைக் கைப்பற்றவும் விடாதீர்கள்.

இரண்டாவதாக: உங்கள் 'வோட்'டின் மதிப்பையும் பெருமையையும் நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே 'வக்கீலி'ன் ஆசை. நாம் ஏன் 'வோட்' செய்கிறோம்; எப்படி 'வோட்' செய்வது; தேர்தலில் நாம் என்ன செய்யவேண்டும்; என்ன செய்யக் கூடாது; தேர்தலைப்பற்றிய சட்ட திட்டங்கள் எவை; தேர்தல் ஊழல்கள் யாவை; தேர்தல் குற்றங்கள் எவை என்று நன்கு தெரிந்து கொண்டால்தான், உங்கள் 'வோட்'டின் மதிப்பு உங்களுக்குத் தெரியும். இது விஷயத்தில் உங்களுக்கு உதவி செய்ய 'வக்கீல்' முன்வரும். அடுத்த மாத "வக்கீல்" இதழ் தமிழ் நாட்டில் லக்ஷக்கணக்கான வாக்காளர்களுக்கும் பொது மக்களுக்கும் அர்ப்பணம் செய்யப்பட்ட ஓர் அறிவு விருந்தாகவே அமையும். 1951 டிசம்பர் "வக்கீல்" இதழானது இந்திய அரசியல் அமைப்பு முதல் தேர்தல் சின்னங்கள் வரை உள்ள பற்பல விஷயங்களைப் பற்றிய சட்ட நுட்பங்கள் அடங்கிய ஒரு புத்தகமாகவே வெளிவரும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

46. **பஞ்சாப் சட்ட சபைச் சட்டம்.** (The Punjab State Legislature (Delegation of Powers) Act. 1951.) பஞ்சாப்புக்கு ஜனாதிபதியே சட்டம் செய்யலாமென்று.

47. **அஸ்ஸாம் எல்லை மாற்றுச் சட்டம்.** Assam Alteration of Boundaries Act 1951. (1-9-1951) இதுவரை இந்திய யூனியனைச் சேர்ந்த அஸ்ஸாம் ராஜ்யத்தைச் சேர்ந்ததாக இருந்த சுமார் 33 சதுர மைல் உள்ள பிரதேசத்தைப் பூடான் சர்க்காருக்கு விட்டுக்கொடுக்கும் சட்டம்.

48. **குழந்தை வேலைத்தடைச் சட்டத் திருத்தம்.** Employment of Children Amendment Act 1951. 15 - வயது பூர்த்தியாகாத குழந்தைகளை ரயில் அல்லது துறைமுக வேலைகளிலும் 14-வயது பூர்த்தியாகாத குழந்தைகளை வேறு சில வேலைகளிலும் அமர்த்திக் கொள்ளக் கூடாதென்று தடை செய்யும் 1938-ஆம் வருடத்திய 26-ஆவது மத்திய சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. 15 வயது பூர்த்தியாகியும் 17 வயது பூர்த்தியாகாமல் இருக்கும் இளைஞர்களை ரயில் அல்லது துறைமுகங்களில் வேலைக்கு அமர்த்திக்கொண்டால் அவர்களுக்கு குறைந்தது தொடர்ந்த 12 மணி ஓய்வு நேரம் இருக்கும்படி தான் அமர்த்திக் கொள்ளலாமென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இவர்கள் வேலை நேரத்தைப்பற்றி ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும். ரயில் அல்லது துறைமுகங்களில் 15 வயது பூர்த்தியாகாத குழந்தைகளை வேலைக்கு அமர்த்திக் கொள்வதும் இச்சட்டத்தில் கண்ட 10 வகை வேலைகளில் 14 வயது பூர்த்தியாகாத குழந்தைகளை வேலைக்கு அமர்த்திக்கொள்வதும் குற்றமாகும். இதற்கு ரூ. 500 வரை அபராதம் விதிக்கப்படலாமென்று இருந்தது. இது மாற்றப்பட்டு இக்குற்றத்திற்கும் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களை மீறுவதற்கும் ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. 14 வயது பூர்த்தியாகாத குழந்தைகளைக் கீழே கண்ட வேலைகளில் அமர்த்திக்கொள்வது இச்சட்டப்படி குற்றமாகும் என்பதைக் கவனிக்கவும். அவை யாவன:—(1) பீடி செய்வது (2) கம்பளம் நெய்வது (3) சிமெண்ட் உற்பத்தி; மூட்டையில் அடைப்பது. (4) ஜவுளியில் அச்சு குத்துவது, சாயம் போடுவது நெசவு செய்தல் (5) நெருப்புப்பெட்டி, வாணவேடிக்கை சாமான்கள் செய்வது (6) மைகா நறுக்குவது (7) அரக்கு வேலைகள் (8) சோப்பு உற்பத்தி (9) தோல் பதனிடும் வேலைகள் (10) கம்பள ரோமத்தைச் சுத்தம் செய்யும் வேலை.

49. **'ஸி' ராஜ்யங்களின் அரசாங்கச் சட்டம்.** Government of Part C States Act 1951. (6-9-1951) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 'C' ராஜ்யங்களாகக் காணப்பட்டிருக்கும் அஜ்மீர், போபால், குடகு, டில்லி, ஹிமாசல பிரதேசம், விந்தியப் பிரதேசம் இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சட்ட சபையும் ஒரு மந்திரி சபையும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

50. **தீர்வைக் கமிஷன் சட்டம்.** Tariff Commission Act 1951. (12-9-1951) பாதுகாப்பு, தீர்வை விதிப்பது பொருளாதார நிலைமை சம்பந்தமான விஷயங்களைப் பரிசீலனை செய்து மத்திய சர்க்காருக்கு ஆலோசனை சொல்ல ஒரு பிரத்தியேக சபை (கமிஷன்) நியமிக்கப்படும். இதில் குறைந்தது மூன்று அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஐந்து பேர்களுக்கு மேல் நியமிக்கப்பட மாட்டார்கள்.

51. ரயில்வே கம்பெனி (நெருக்கடி நிலைமை) சட்டம். Railway Companies Emergency Provisions Act 1951. (14-9-1951.) சர்க்காரால் எடுத்துக்கொள்ளப் படாத இன்னும் சில ரயில்வே கம்பெனிகள் இருக்கின்றன. இவ்விதமான கம்பெனிகளின் நிர்வாகத்தில் பொதுமக்களுடைய போக்கு வரத்துச் சௌகரியத்துக்கோ, வியாபாரத் திற்கோ கேடு ஏற்படும் நிலைமை ஏற்பட்டாலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டாலும், அந்த ரயில்வே கம்பெனியின் நிர்வாகத்தைச் சர்க்காரே எடுத்துக் கொள்வதற்கான சட்டம். இது சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதற்கு பதிலாக இச் சட்டம் பார்லிமெண்டால் இயற்றப்பட்டுள்ளது.

52. இந்தியக் கம்பெனிச் சட்டத் திருத்தம். The Indian Companies Amendment Act 1951. (14-9-1951.) கம்பெனிகளின் பெரும்பான்மையான பங்குகளை (ஷேர்களை) சிலர் வாங்கி, அக்கம்பெனியின் நிர்வாகத்தையே தம் கைக்குள் கொண்டு வருவதைத் தடுக்க கம்பெனிச் சட்டத்தில் பல புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டிருந்த அவசரச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பார்லிமெண்டால் இச்சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது.

1951-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச்சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை-சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

21. சென்னை ஜில்லா போர்டு சட்டத் திருத்தம். Madras District Boards Amendment Act 1951. (18-9-1951.) ஜில்லா போர்டுகளில் முஸ்லீம்களுக்கும், இந்தியக் கிறிஸ்துவர்களுக்கும், ஐரோப்பியர் களுக்கும் சில ஸ்தானங்களை ஒதுக்கவேண்டு மென்று இருந்த ஷரத்து இப்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கிணங்க ஷெடியூல் ஜாதியினருக்கும், ஆங்கிலோ-இந்தியர் களுக்கும் ஸ்திரீகளுக்கும் சில ஸ்தானங்கள் ஒதுக்கப்படலாம். இத்திருத்தம் ஜில்லா போர்டுகளுக்கு அடுத்த தேர்தல்கள் நடக்கும் போது தான் அமுலுக்கு வரும்.

22. சென்னை-சிட்டி முனிசிபல் சட்டத் திருத்தம். Madras City Municipal—Amendment—Act, 1951. (18-9-1951.) இப்பொழுது இருக்கும் சட்டப்படி 1951 நவம்பர் முதல் தேதியுடன் பதவி நீங்கும் கவுன்சிலர்கள் ஆல்டர்மென் இவர்களுடைய பதவிக்காலத்தை நீடிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கும் சட்டம்.

23. மோட்டார் ஸ்பிரிட் வரிச்சட்டத் திருத்தம். Madras Sales of Motor Spirit Taxation-Amendment -.Act 1951. (18-9-1951.)

24. முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு, கிராமப் பஞ்சாயத்துச் சட்டங்களின் திருத்தம். Mādras District Municipalities, District Boards, and Village Panchayats Amendment - Act 1951. (25-9-1951.) முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு, பஞ்சாயத்து இவைகளின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் தேர்தல்களுக்காக, 'வாக்காளர் ஜாப்தா' (Electoral Rolls) எப்படித் தயார் செய்வது என்பதைப் பற்றி, சென்னைச் சட்டசபை (Assembly) தேர்தலுக் காகத் தயார் செய்யப்பட்டிருக்கும் வாக்காளர் ஜாப்தாவில் அந்தந்த முனிசிபாலிட்டி ஜில்லா போர்டு, அல்லது கிராமபஞ்சாயத்து எல்லைக் குள்ள வாக்காளர்களைக் கொண்டதாகத்தான் அம்முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு அல்லது கிராமப்பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தா இருக்கும்.

25. சென்னைக் கட்டடங்களின் ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திருத்தம். Madras Buildings Lease and Rent

Control Second Amendment Act, 1951. (27-9-1951) 30-9-1951 உடன் அமுல் இழந்து விடும்படி இருந்த இச்சட்டம் 30-9-1953 முடிய நீடிக்கப்பட்டிருக்கிறது.

26. **சென்னை அத்தியாவசியப் பொருள் தாற்காலிகக் கட்டுப்பாட்டுச் சட்டத்திருத்தம்.** Madras Essential Articles Control and Requisitioning-Temporary Powers — Amendment Act, 1951. (27-9-1951.) 30-9-1951 உடன் அமுல் இழந்துவிடும்படி இருந்த இச்சட்டம் 31-12-1952 முடிய நீடிக்கப்பட்டிருக்கிறது.

27. **சென்னை மருந்துக் கட்டுப்பாடு சட்டத்திருத்தம்.** Madras Drugs Control Amendment Act, 1951. (2-10-1951.) 1949 ஆம் வருடத்திய மருந்துக் கட்டுப்பாடுச் சட்டத்தில், சில மருந்துகளைத் தேவையானல் சிவில் சப்ளை கமிஷனர், தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று (Requisition) உத்தரவு போட அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரம் இத் திருத்தச் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டது.

28. **சென்னை குடிவாரப் பாத்திய ரத்துக்கள் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.** Madras Tenants and Ryots Protection - Amendment - Act 1951. 7-10-1951ல் அமுல் இழந்து விடும்படி இருந்த இச்சட்டம் 7-10-1953 முடிய நீடிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக செக்‌ஷன் 1 (3)ன் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

கண்ட்ரோல்

பெப்பர்மெண்ட் தொழிற்சாலை லைசென்சு உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது.

பெப்பர்மெண்ட், லாஸென்ஜ், டாபி சாக்லேட் முதலிய பலவகை மிட்டாய்கள் செய்யும் 10 அல்லது அதிகமான வேலையாட்கள் உள்ள தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் நடத்தவும் சிவில் சப்ளை கமிஷனர் அல்லது ஜில்லாக் கலெக்டருடைய 'லைசென்சு' வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் இவர்களைப்பற்றிய இன்னும் பல நிபந்தனைகள் விதித்திருந்த 1949-ஆம் வருடத்திய கண்ட்ரோல் உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது. (G. O. Ms. No. 1844— சென்னை சர்க்கார் கெஜட் 2—10—1951 பாகம் II—பக்கம் 1351)

சட்டங்களை அனுசரித்து செய்யப்படும்-விதிகள்

கூட்டுறவுச் சங்கச்சிப்பந்திகள் மெம்பராகவும், இருக்கக் கூடாது. விதிகள் மாற்றம்.

கூட்டுறவுச் சங்கங்களில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்க முடியாதென்று நிபந்தனைகள், விதிக்கும் விதி 18-A-ல் கீழ்க்கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:— ஒரு கூட்டுறவுச் சங்கத்திலோ, அதற்குப் பணவசதி கொடுக்கும் பாங்கியிலோ (Financing Bank) அதுவே அவ்விதமான பாங்கியாக இருந்தால் அது பண உதவி செய்யும் மற்றச் சங்கங்களிலோ சம்பளம் வாங்கும் சிப்பந்திகளாக இருப்பவர்கள் அவைகளில் 'மெம்பராக'ச் சேர முடியாது; ஏற்கனவே மெம்பராக இருப்பவர் சிப்பந்தியானவுடன் அவருடைய மெம்பர் பதவி போய்விடும்; இப்பொழுது மெம்பராகவும் சிப்பந்தியாகவும் இருப்பவர்களுக்கும் மெம்பர் பதவி போய்விடும். ஆனல் இவ்விதி கூட்டுறவு மோட்டார் டிரான்ஸ்போர்டு சங்கங்களுக்கும், மாஜி ராணுவ சிப்பந்திகளுடைய கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கும் கிடையாது. (G. O. 3654—21-8-1951 தேதி சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I ருல் சப்ளிமெண்ட் - பக்கம் 491.)

கிராம பஞ்சாயத்துச் சட்ட விதிகள்

சென்னைக் கிராம பஞ்சாயத்துச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்துச் சென்னை சர்க்காரால் கீழே கண்ட விஷயங்களைப்பற்றி விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன:—

அறிக்கை 1:—கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தும் விஷயமாய்.

அறிக்கை 2:—ஒரு கிராமப் பஞ்சாயத்தின் வருமானத்தில் கிராம ரஸ்தாக்கள் போடுவது ரிப்பேர் செய்வது இச்செலவுக்காகக் குறைந்தது 20 சத விகிதமும்; கிணறு வெட்டுவது, ரிப்பேர் செய்வது, குளம் குட்டைகளைப் பராமரிப்பது ஜல சப்ளை இவைகளுக்காகக் குறைந்தது 10 சத விகிதமும் கட்டாயம் செலவு செய்யவேண்டும். இதற்குக் குறைவாகச் செலவு செய்ய ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதி வேண்டும்; பொது ரஸ்தாக்களிலும் இடங்களிலும் விளக்குப் போடுவதில் மொத்த வருமானத்தில் 15 சத விகிதத்திற்கு மேலும்; சுகாதார விஷயமான செலவுகளுக்கு - சாக்கடை; தெருவைச் சுத்தம் செய்வது; கக்கூஸ்; மயானம்; தொத்து வியாதி தடுப்பது-முதலிய செலவுகளுக்கு 30 சத விகிதத்திற்கு மேலும் எந்தப் பஞ்சாயத்தும் செலவு செய்யக் கூடாது; அப்படிச் செய்ய ரீஜனல் இன்ஸ்பெக்டருடைய அனுமதி வேண்டும்.

அறிக்கை 3:—குடி மராமத்து வேலைகளைப் பஞ்சாயத்துச் செய்வது பற்றிய விதிகள் - இதற்காக வரி விதிப்பது பற்றியும்.

அறிக்கை 4:—வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி.

அறிக்கை 5:—ஒரு தாவா அல்லது நடவடிக்கைக்கு ரூ. 10-க்கு மேல் செலவு செய்ய ஜில்லா பஞ்சாயத்து ஆபீசரின் அனுமதி வேண்டும்.

அறிக்கை 6:—பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் தேர்தலைப்பற்றிய விதிகள்.

அறிக்கை 7:-குத்தகைதார்களுக்கும் கண்ட்ராக்டர்களுக்கும் வஜா செய்வது பற்றிய விதிகள்.

அறிக்கை 8:—பஞ்சாயத்து நிலங்களிலோ பொது ரஸ்தாக்களிலோ இருக்கும் மரங்களைப் பற்றிய விதிகள்.

அறிக்கை 9:—சொந்தச் சந்தைகள் வைத்திருப்பதுபற்றிய விதிகள்.

அறிக்கை 10:—பஞ்சாயத்துக்கள் உப விதிகள் (By-Laws) ஏற்படுத்திக் கொள்வதுபற்றிய விதிகள்.

(21-8-1951 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I A-ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 154.)

சிவில் வழக்கு முறை விதிகள்.
புதிய விதிகள்.

சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் (Code of Civil Procedure 1908) முதல் ஷெட்யூலில், ஆர்டர் 8-A என்று ஒரு புது அத்தியாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது, ஒரு தாவாவில் கட்சிக்காரர்களாக இல்லாத மூன்றாம் நபர்களையும் கட்டுப்படுத்தி, தீர்ப்பு வாங்குவது பற்றியது. இதன் முக்கிய அம்சங்கள்:—எந்த வழக்கிலும் அதன் பிரதிவாதியானவர் அத்தாவாவின் தொகைகளைக் கொடுக்கத் தம்மைப் போல் வேறு ஒருவரும், அதாவது தாவாவில் சேராத வேறு மூன்றாம் நபரும், கட்டுப்பட்டிருக்கிறார் (Contribution) என்றாவது; அல்லது தாவாத் தொகையைத் தாம் கொடுத்தால் அதை வேறு ஒரு மூன்றாம் நபரிடமிருந்து வசூல் செய்து கொள்ளத் தமக்கு உரிமை இருக்கிறது, (Indemnity) என்றாவது கட்சி சொன்னால், அவர் கோர்ட்டின் அனுமதியின் பேரில், இவ்விஷயத்தைக்கண்டு அந்த மூன்றாம் நபருக்குக் கோர்ட் மூலமே ஒரு நோட்டீஸ் அனுப்பலாம். அந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்ட மூன்றாம் நபரும் ஒரு பிரதிவாதியைப் போலவே அத்தாவாவில் சேர்ந்துகொண்டு தம் கட்சிகளை சொல்லலாம். அதே வழக்கிலேயே அம்மூன்றாம் நபருடைய பொறுப்பும் நிர்ணயம் செய்யப்படும். இதில் தம் கட்சிகளைச் சொல்லிக்கொண்டு நடத்தாத மூன்றாம் நபர்களும் அவ்வழக்கின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவராவார்கள். ஏற்கனவே பிரதிவாதிகளாக இருப்பவர்களுக்குள், ஒருவருக்கொருவர் அவ்வழக்குச் சம்பந்தமான விஷயங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளையும் அதே வழக்கில் நிர்ணயம் செய்ய இவ்விதிகள் அனுமதிக்கின்றன.

(21-8-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 163.)

தேர்தல் (எலெக்ஷன்) சட்டங்கள்

[ஜனப்பிரதிநிதிச் சட்டம். (*1951*) The Representation of the People Act 1951-ஆம் வருடத்திய 43 ஆவது மத்திய சட்டம். இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப் பட்டது. 17—7—1951-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. இச்சட்டத்தில், பார்லிமெண்ட்டின் இரு சபைகளுக்கும், ராஜ்ய சட்டசபைகளுக்கும் அங்கத்தினராக நிற்பவர்களின் யோக்கியதாம்சங்களைப் பற்றியும்; பொதுத் தேர்தல் நடத்தும் முறைபற்றியும்; தேர்தல் நடத்தும் அதிகாரிகளைப் பற்றியும்; தேர்தல் தகராறுகளை விசாரணை செய்து தீர்மானம் செய்வது பற்றியும்; தேர்தல் சம்பந்தமான ஊழல் அல்லது சட்ட விரோதமான நடத்தை குற்றங்கள் இவைபற்றியும் பல நுட்பமான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இச்சட்டத்தில் மொத்தம் 171 செக்ஷன்கள் இருக்கின்றன. பார்லிமெண்ட் அல்லது சட்டசபைகளுக்கு மெம்பராக வர, தேர்தலில் போட்டியிடுபவர்களும், அவர்களுடைய ஏஜண்டுகளும் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்களையும் இச்சட்ட ஷரத்துக்களையும் விதிகளையும் மிக நுட்பமாகக் கவனிப்பது அவசியமாகும். சில முக்கிய ஷரத்துக்கள் மட்டில் கீழே பொதுவாக விளக்கப்பட்டிருக்கின்றன.]

அங்கத்தினராக நிற்க யோக்கியதாம்சங்கள்.

டில்லி பார்லிமெண்டின் 'மக்கள் சபை' (House of the People) தொகுதிக்கு நிற்க:—

1. ஓர் இந்தியப் பிரஜையாக (Citizen of India) இருக்கவேண்டும்.

2. 25 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

3. இந்தியாவின் எந்தப் பார்லிமெண்ட் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவிலாவது பெயர் உள்ளவராக இருக்கவேண்டும்.

4. ஷெட்யூல் வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்குப் போட்டியிடுபவர் ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்; ஷெட்யூல் ஆதிவாசிகளுக்கும் அப்படியே.

5. கீழே "யோக்கியதைக் குறைவுகள்" என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவுகள் எதுவும் இருக்கக் கூடாது.

சென்னைச் சட்டசபை 'அசெம்பிளி' (Assembly) தொகுதிக்கு நிற்க.

1. ஓர் இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டும்.

2. 25 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

3. சென்னை ராஜ்யத்தில் எந்த 'அசெம்பிளி' வாக்காளர் ஜாப்தாவிலாவது பெயர் உள்ளவராக இருக்க வேண்டும்.

4. ஷெட்யூல் வகுப்பு ஸ்தானங்களுக்கு நிற்பவர் அதே வகுப்பினராகவும் இருக்க வேண்டும்.

5. கீழே "யோக்கியதைக் குறைவுகள்" என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவுகள் எதுவும் இருக்கக் கூடாது.

டில்லி பார்லிமெண்டின் மேல் சபை அல்லது 'ராஜ்யங்களின் சபை' (Council of States) அங்கத்தினராக நிற்க.

1. ஓர் இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டும்.

2. 30 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

3. அவர் அந்த ராஜ்யத்தில், எந்தப் பார்லிமெண்ட் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவிலாவது பெயர் உள்ளவராக இருக்கவேண்டும்.

4. கீழே "யோக்கியதைக் குறைவுகள்" என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவுகள் எதுவும் இருக்கக் கூடாது.

சென்னை மேல் சட்டசபை (Legislative Council) அங்கத்தினராக நிற்க.

1. ஓர் இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டும்.

2. 30 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

3. சென்னை ராஜ்யத்தில் எந்த அசெம்பிளி வாக்காளர் ஜாப்தாவிலாவது பெயர் உள்ளவராக இருக்க வேண்டும். ஆனால் கவர்னரால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் சாதாரணமாய் அந்த ராஜ்ய வாசியாக இருந்தால் போதும்.

4. கீழே கண்ட "யோக்கியதைக் குறைவுகள்" என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவுகள் எதுவும் இருக்கக் கூடாது.

யோக்கியதைக் குறைவுகள் (Disqualifications)

கீழே கண்டவர்கள் டில்லி பார்லிமெண்ட்டின் எந்த சபைக்கும் சரி, ராஜ்யச்சட்ட சபைகள் எதற்கும் சரி அங்கத்தினராக வரமுடியாது; போட்டியிடமுடியாது. அதாவது:—

1. சம்பளம் அல்லது வருமானம் அடையும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் (மந்திரிகள் தவிர. ஆனால் சட்டசபைகள் வேறு விதிவிலக்குகளும் அளிக்கலாம்.)

2. புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் என்று கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்டவர்கள்.

3. இன்சால்வெண்டுகள் (டிஸ்சார்ஜ் அடையாதவர்கள்).

4. அன்னியப் பிரஜையாகி விட்டவர்கள் அல்லது அன்னிய ராஜ்யத்திற்குட்பட்ட பதவி அல்லது பற்றுள்ளவர்கள்.

5. தேர்தல் ஊழல் அல்லது சட்ட விரோதமான நடத்தைக்காகத் தண்டிக்கப் பட்டவர்கள் அல்லது கிந்திக்கப்பட்டவர்கள்.

6. கிரிமினல் குற்றத்திற்காகத் தீவாந்தர சிட்சை அல்லது இரண்டு வருடத்திற்குக் குறையாத சிறைத்தண்டனை அடைந்தவர்கள் விடுதலை அடைந்து 5 வருடம் ஆகாதவர்கள்.

7. இதற்கு முன் நடந்த தேர்தல்களில் தேர்தல் கணக்குகளைச் சட்டப்படிக்கும் கெடுவுக்குள்ளும் கொடுக்காத அபேட்சகர்களும் அவர்களுடைய ஏஜண்டுகளும் (5 வருடம் வரை போட்டியிட முடியாது).

8. சர்க்காருக்குச் சரக்குச் சப்ளை செய்யவோ, வேலை செய்து கொடுக்கவோ ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பவர்கள். (மத்திய சர்க்காருடன் ஒப்பந்தமுள்ளவர்கள் பார்லிமெண்ட் சபைகளுக்கும் ராஜ்ய சர்க்காருடன் ஒப்பந்த முள்ளவர்கள் ராஜ்ய சட்டசபைகளுக்கும் அபேட்சகராக நிற்க முடியாது. தாமே நேரே ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும் தமக்காக வேறு ஒருவர் மூலம் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாலும் ஒன்றுதான்.)

9. சர்க்காருக்குப் பங்குள்ள ஸ்தாபனங்களில் டைரெக்டராகவோ நிர்வாகஸ்தராகவோ இருப்பவர்கள்.

10. ஏற்கனவே சர்க்கார் ஊழியராக இருந்து லஞ்சம் வாங்கியதற்காகவோ, துரோக நடத்தைக்காகவோ தள்ளப்பட்டவர்கள். (5 வருடம் தேர்தலில் போட்டியிடமுடியாது.) இவ்விதிகளுக்கெல்லாம் பல விதி விலக்குகளும் நிபந்தனைகளும் இருக்கின்றன.

அபேட்சகர் நியமனம்: தேர்தல் தேதி நிர்ணயம் செய்யப்பட்ட பின் (1) அபேட்சகர்களின் நியமனச் சீட்டுக்களை (Nomination) 'ரிடர்னிங்' ஆபீசரிடம் தாகல் செய்யவும் (2) அவைகளை ரிடர்னிங் ஆபீசர் பரிசீலனை செய்யவும் (3) அபேட்சகர்கள் வாபஸ் செய்துகொள்வதைத் தெரிவிக்கவும் தேதிகள் குறிப்பிடப்படும்.

பிறகு ஏற்றுக்கொள்ளப் பட்ட அபேட்சகர்களின் ஜாப்தா பிரசுரம் செய்யப்படும்.

நியமனப் பத்திரத்துடன் பார்லிமெண்ட் சபைக்குப் போட்டியிடுபவர்கள் ரூபாய் 500-ம் ராஜ்ய சட்ட சபைக்குப் போட்டி யிடுபவர்கள் ரூபாய் 250-ம் டிபாசிட் கட்ட வேண்டும். ஷெடியூல் வகுப்பினரும் ஷெடியூல் ஆதிவாசிகளுக்கும் இதில் பாதி கட்டினால் போதும். மேலும் ஒவ்வொரு அபேட்சகரும் தேர்தலுக்காகத் தம்மையோ வேறு ஒருவரையோ 'எலெக்ஷன் ஏஜண்டாக' நியமித்துக்கொண்டு அதையும் நியமனச்சீட்டுத் தாகல் செய்யப்படும் முன்பே தாகல் செய்ய வேண்டும். தேர்தல் சம்பந்தமான கணக்குகளை எலெக்ஷன் ஏஜண்டு சரிவர வைத்துக்கொண்டு குறிப்பிட்ட கெடுவுக்குள் இதை ரிடர்னிங் ஆபீசரிடம் தாகல் செய்ய வேண்டும்.

மேலும் தேர்தல் நடக்கும் தேதிக்கு மூன்று தினங்கள் முன்பதாக ஒவ்வொரு தேர்தல் இடத்திற்கும் (போலிங் ஸ்டேஷன் அல்லது பூத்) ஒவ்வொரு அபேட்சகரும், ஒரு போலிங் ஏஜண்டும் இரண்டு ரிலீவிங் ஏஜண்டுகளும் நியமிக்கலாம். மேலும் 'வோட்'டுகளை எண்ணும்

போதாகூட இருக்க ஒவ்வொரு அபேட்சகரும் ஒரு 'கவுண்டிங்' ஏஜண்டு நியமிக்கலாம்.

பொதுத் தேர்தல்: பார்லிமெண்ட் சபைகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டிய தேதிகளை ஜனாதிபதி அவர்களும், ராஜ்யச் சட்ட சபைகளுக்குத் தேர்தல் நடத்தவேண்டிய தேதிகளைக் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர்களும், எலெக்ஷன் கமிஷனின் சிபார்சை அனுசரித்து நிர்ணயம் செய்வார்கள். ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒரு 'ரிடர்னிங் ஆபீசர்' நியமிக்கப்படுவார். இவர் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தராக இருப்பார். ராஜ்ய சர்க்காருடன் கலந்து கொண்டு இவரை 'எலெக்ஷன்' கமிஷன்தான் நியமிக்க வேண்டும். உதவி ரிடர்னிங் ஆபீசர்களும் நியமிக்கப்படலாம். சட்டப்படிக்கும், விதிகளை அனுசரித்தும் அந்தந்தத் தொகுதியில் தேர்தலை நடைமுறையில் நடத்த வேண்டிய கடமை இந்த 'ரிடர்னிங் ஆபீச'ருடையதே. இவர்தான் எலெக்ஷன் 'கமிஷனைக் கலந்து கொண்டு தேர்தலில் 'வோட்' பதிவு செய்யும் இடங்கள் (போலிங் ஸ்டேஷன்கள்) எங்கே எங்கே இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, அதைப் பிரசுரம் செய்ய வேண்டும். ஒவ்வொரு 'போலிங்' ஸ்டேஷனுக்கும் ஒரு தலைமை ஆபீசரையும் (Presiding officer) அவருக்கு உதவ 'போலிங் ஆபீசர்'களையும் ரிடர்னிங் ஆபீசர்தான் நியமிக்க வேண்டும். போலிங் ஸ்டேஷனில் அமைதியாகவும் நியாயமாகவும் வாக்காளர்கள் தம் தம் வாக்கைப் (வோட்) பதிவு செய்யும்படி சந்தர்ப்பமளிக்க வேண்டியது போலிங் தலைமை ஆபீசருடைய கடமை.

எந்தப் போலிங் ஸ்டேஷனிலாவது வோட் எடுக்கும்போது கலகங்கள் நடந்தோ, எதிர்பாராத விபத்துகள் ஏற்பட்டோ வோட் எடுப்பது சாத்தியமாகாவிட்டால் தலைமை ஆபீசர் வோட் போடும் தினத்தை ஒத்திப்போட அதிகாரம் உண்டு. பின்பு வேறு தேதி குறிப்பிடப்படும்.

ஆள் மாறாட்டத்தைத் தடுக்க ஒவ்வொரு வாக்காளர் விரலிலும் மையினால் அடையாளம் செய்யப்படும்: தேர்தல் நடக்கும் இடத்திற்கு வந்து தம் வாக்கை (வோட்டை)ப் பதிவு செய்யவரும் ஒவ்வொரு வாக்காளருடைய இடதுகை விரலிலும் அழியாத மையினால் அடையாளம் செய்யப்படும். அவ்விதம் அடையாளம் செய்யப் பட்டவர்கள் மறுபடியும் தம் வாக்கைப் பதிவு செய்ய வந்தால் அனுமதிக்கப்படமாட்டார்.

'வோட்' செய்வது:- அந்தந்தத் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் உள்ளவர்கள்தான் அந்தந்தத் தொகுதியில் நடக்கும் தேர்தலில் 'வோட்' செய்யலாம். இந்தியப் பிரஜை அல்லாதவரும், புத்தி சுவாதீனமற்றவரென்று கோர்ட்டால் நிர்ணயிக்கப்பட்டவரும், தேர்தல் குற்றம் செய்ததால் யோக்கியதை இழந்தவரும் எந்தத் தேர்தலிலும் 'வோட்' கொடுக்க முடியாது. ஒரே வகைத் தொகுதியில் ஒருமுறைதான் 'வோட்' கொடுக்கலாம். பல தொகுதிகளில் 'வோட்' பதிவு செய்தவருடைய எல்லா 'வோட்'களும் செல்லா. ஒரே தொகுதியில் ஒருவருடைய பெயர் வாக்காளர் ஜாப்தாவில் பல இடங்களில் இருந்தாலும், அவர் ஒரேஒரு தரம்தான் 'வோட்' கொடுக்கலாம். தண்டனை அடைந்து ஜெயிலில் இருப்பவர்களும் போலீஸ் காவலில் இருப்பவர்களும் 'வோட்' செய்யக்கூடாது. தடுப்புக் காவலில் இருப்பவர்கள்மட்டில் 'வோட்' செய்யலாம்.

தேர்தல் தகராறுகள்:— தேர்தல் சம்பந்தமான முடிவுகளை எவரும் சிவில் கோர்ட்டுகளில் ஆட்சேபிக்க முடியாது. தேர்தல் முடிவை ஆட்சேபனை செய்பவர்கள் 'எலெக்ஷன் கமிஷனு'க்கு மனுப்போடவேண்டும். மனுவுடன் ரூபாய் 1000 டிபாசிட் கட்டவேண்டும். மனுவை விசாரிக்க ஒரு 'டிரிபுனல்' நியமிக்கப்படும். அதன் தலைவர் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் அல்லது ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துள்ளவராக இருப்பார். வேறு இரண்டு அங்கத்தினர்களும் இருப்பார்கள். இந்த டிரிபுனல் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

தேர்தல்கள் ரத்து செய்யப்படலாம்

ஒரு தேர்தலில், தாராளமாக லஞ்சம் வழங்கப்பட்டிருந்தாலும் சரி, நியாய மற்ற செல்வாக்கு உபயோகப்பட்டிருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட ஜாதி அல்லது வகுப்பினரால் வாக்காளர்கள் கட்டாயப் படுத்தப்பட்டோ பயமுறுத்தப்பட்டோ 'வோட்' கொடுத்திருந்தாலும் சரி, அத்தேர்தலே செல்லாதென 'டிரிபுனல்' சொல்லலாம். அபேட்சகர்கள் நியமனம் தாக்கல் செய்யப்படும்போது ஒரு அபேட்சகர் சட்ட விரோதமாய் ஏற்றுக் கொள்ளப் பட்ட காரணத்தினாலோ, ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தினாலோ, அத்தேர்தலின் போக்கே மாறிவிட்டதென்று ஏற்பட்டாலும் அத்தேர்தல் செல்லாதென 'டிரிபுனல்' தீர்ப்பளிக்கலாம். தேர்தலில் நடந்த கீழே விஸ்தரிக்கப்பட்டிருக்கும் "பெரிய தேர்தல் ஊழல்கள்", "சிறிய தேர்தல் ஊழல்கள்", "சட்ட விரோதமான நடத்தைகள்" இவைகளால்தான் ஒரு அபேட்சகர் ஜயித்தார் என்று ஏற்பட்டாலும் தேர்தல் ரத்தாகிவிடும். தேர்

187713

தலில் ஜயித்த அபேட்சகரோ, அவருடைய ஏஜண்டோ, அல்லது அவருடன் ஒற்றுமையாக இருந்த ஒருவரோ கீழே "பெரிய தேர்தல் ஊழல்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் எதைச் செய்திருந்தாலும் அவருடைய தேர்தல் ரத்தாகும். மேலும் சட்ட விரோதமாக 'வோட்'களைப் பதிவு கொண்டதாலோ, மறுத்ததாலோ தேர்தல் சம்பந்தமான சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றாத காரணத்தினாலோ, தவறாலோ, தேர்தலின் முடிவு பாதிக்கப்பட்டதென்று ஏற்பட்டாலும், அத்தேர்தல் ரத்துச் செய்யப்படும். தேர்தல் மனுப்போட்டவரையே 'ஜயித்த'வராகவும் தீர்மானிக்கவும் டிரிபுனலுக்கு அதிகாரம் உண்டு.

தேர்தல் ஊழல்களும் குற்றங்களும்

பெரிய ஊழல்கள் (Major Corrupt Practices) :—(1) லஞ்சம் கொடுப்பது (Bribery) — அதாவது ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வேறு ஒரு அபேட்சகர் போட்டியிடுவதற்கோ, போட்டியிடாமலிருக்கவோ பணம் முதலிய வெகுமானம் கொடுப்பது; அல்லது வாக்காளருக்கு வோட் போடவோ, வோட் போடாமலிருக்கவோ வெகுமானம் கொடுப்பது. உண்மையாகச் சட்டப்படிக்கான செலவு செய்யப்பட்டு அதற்காகக் கணக்கில் எழுதப்பட்டுக் கொடுக்கப்படும் தொகைகள் இதில் சேராது. (2) மிதமிஞ்சிய நிர்ப்பந்தம் (undue Influence) — அதாவது ஒரு அபேட்சகரையோ, வாக்காளரையோ ஜாதிக்கட்டுப்பாடு செய்து விடுவதாகவோ வேறு விதமாகத் துன்புறுத்துவதாகவோ பயமுறுத்துவது; தெய்வ சாபம் ஏற்படுமென்று அவர் மனதில் பயத்தை உண்டாக்குவது முதலியவை. (3) ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ ஒரு வாக்காளருடைய வாக்குச் சீட்டை ஆள் மாறாட்டம் செய்து வாக்கும்படி வேறு ஒருவரைத் தூண்டுவது. (4) 'போலிங்' ஸ்டேஷனில் வோட்டிங் நடக்கும்போது, அபேட்சகரோ, அவர் ஏஜண்டோ, வாக்குச் சீட்டுகளை அப்புறப்படுத்துவது. (5) ஒரு அபேட்சகரின் நடத்தையைப் பற்றியோ, சொந்த யோக்கியதாம்சங்களைப் பற்றியோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவதைக் கெடுக்கும் பொருட்டும் பொய்யான விஷயங்களை வேறு ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ பிரசுரம் செய்வது. (6) வாக்காளர்களைப் போலிங் ஸ்டேஷனுக்கு ஏற்றிச் செல்லவும் திரும்பக்கொண்டுவரவும் ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வாகனங்கள் அல்லது வண்டிகள் ஏற்பாடு செய்வது. (7) இச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் மாறாக ஒரு அபேட்சகர் அல்லது அவர் ஏஜண்டு செலவு செய்வது. (8) ஒரு அபேட்சகர் தாம் ஜெயிப்பதற்காக, சர்க்கார் உத்தியோகஸ்தருடைய உதவியை நாடுவது-இவைகள் பெரிய ஊழல்களாகும்.

சிறிய ஊழல்கள் (Minor Corrupt Practices.) :—(1) அபேட்சகர் அவர் ஏஜண்டு அல்லது அவர்கள் உதவியில்லாத ஒருவர் மேற்கண்ட எட்டு வகை ஊழல்களில் ஏதாவது செய்வது. (2) ஒரு வாக்காளர் ஆள்மாறாட்டம் செய்து வோட் செய்வது அல்லது ஒரு இடத்தில் வோட் செய்துவிட்டு மறுபடி வோட் பதிவு செய்ய வருவது. (3) அபேட்சகராக இருப்பவர் போட்டி இடவோ வாபஸ் வாங்கவோ லஞ்சம் வாங்கிக் கொள்வது. (4) தேர்தல் கணக்குப் பொய்யாகக் கொடுப்பது. (5) ஒரு அபேட்சகர் தாம் ஜயிப்பதற்காக ஜாதி, இனம், பிரிவு, மதம் இவை பேரால் வாக்காளர்களை உத்சாகப்படுத்துவது; அல்லது மதச் சின்னங்களையோ, தேசியக் கொடி, தேசியச் சின்னம் போன்றவைகளை உபயோகப்படுத்துவது.

சட்ட விரோதமான நடத்தைகள் :—(1) ஒரு அபேட்சகரைத் தவிர எவரும் அபேட்சகருடைய எழுத்து மூலமான அனுமதியின்றி ஒரு பொதுக் கூட்டத்திற்காகவோ, விளம்பரம் செய்யவோ, அறிக்கைகள் விடவோ செலவு செய்யச் செய்வது. (ஒரு ஸ்தாபனத்தால் செலவு செய்யப்படுவது இதில் சேராது.) (2) பொதுமக்களுக்கு மதுபானம் விற்பனை செய்யும் இடங்களை வாக்காளர்கள் கூடுவதற்காக ஏற்பாடு செய்வது (3) அச்சகம் பிரசுரிப்பவர் இவர்கள் பெயர் போடாத பிரசுரங்களையோ சுவரொட்டிகளையோ பிரசுரம் செய்வது.

குற்றங்கள் :—(1) ஒரு தொகுதியில் வாசகுப்பதிவு (வோட்) எடுக்கப்படும் தினத்தில் (Election Day) பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதும், அதற்குப் போவதும் குற்றமாகும். இதற்கு ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (2) ஒரு தொதியில் தேர்தல் நடைபெறும் என்ற அறிக்கை வெளியான பின்பும், தேர்தல் தினத்திற்கு முன்பும் நடக்கும் ராஜீய சம்பந்தமான கூட்டங்களை நடக்கவொட்டாமல் செய்ய எவரும் ஒழுங்கீனமாக நடப்பது குற்றமாகும் — இதற்கும் ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். ஒரு 'மீட்டிங்' நடக்கும்போது அதன் தலைவரின் வேண்டுகோளின் பேரில் அவ்விதம் ஒழுங்கீனமாக நடப்பவரின் விலாசத்தை எந்தப் போலீஸ்காரரும் குறித்துக்கொள்ளலாம். விலாசம் கொடுக்க மறுப்பவரையும் பொய் விலாசம்

கொடுப்பதாகச் சந்தேகப்படப் படுபவரையும் போலீசார் அரெஸ்டும் செய்யலாம். (3) தேர்தல் நடத்தும் உத்தியோகஸ்தர்கள் ஒரு வாக்காளர் 'வோட்' கொடுத்ததைப்பற்றியோ அதை எண்ணுவது பற்றியோ ரகசியமாக வைத்துக் கொள்ளாமலிருப்பது குற்றமாகும். இதற்கு மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (4) ரிடர்னிங் ஆபீசர் முதலிய எந்தத் தேர்தல் அதிகாரியும் ஒரு அபேட்சகர் ஜயிக்க வேண்டுமென்று அவருக்குச் சாதகமாக நடந்து கொள்வது குற்றமாகும். எந்தத் தேர்தல் அதிகாரியாவது போலீஸ் உத்தியோகஸ்தராவது ஒரு வாக்காளரை, 'வோட்' கொடுக்கும்படியோ, கொடுக்கவேண்டாமென்றோ வேறு ஒருவருக்கு வோட் சம்பந்தமாய்ச் சிபார்சு செய்யும்படியோ கேட்பதும் குற்றமாகும். இக்குற்றங்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (5) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் 'போலிங் ஸ்டேஷனில்' அல்லது அதற்கு 100 கஜத்திற்குள் எவரும் வாக்காளர்களை ஒரு அபேட்சகருக்கு வோட் போடும்படி கேட்பதோ, வோட் போடாமலிருக்கும்படி கேட்பதோ தேர்தல் சம்பந்தமாய் விளம்பரம் செய்வதோ குற்றமாகும். இதற்கு ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (6) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் இடத்திலோ சமீபத்திலோ எந்த ஒலி பெருக்கியையும் உபயோகிப்பது குற்றமாகும்; கூச்சலிடுவதும் குற்றமாகும்; இதற்கு 3 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (7) தேர்தல் அதிகாரியின் சட்டப்படிக்கான உத்தரவுப்படி நடக்காமலிருப்பதும் குற்றமாகும். இதற்கும் அதே தண்டனை உண்டு. (8) போலிங் ஸ்டேஷனுக்கு வாக்காளர்களை அழைத்துச்செல்ல ஒரு அபேட்சகர் வண்டி வைப்பதும் குற்றமாகும். ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (9) தேர்தல் அதிகாரிகள் இச்சட்டப்படி நடக்காமலிப்பதும் குற்றம்தான். ரூபாய் 500 வரை அபராதம் விதிக்கப்படலாம். (10) தேர்தலில் நடக்கும் இடத்தை விட்டு வாக்குச் சீட்டை வெளியே மோசடியாகக் கொண்டுபோவது குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (11) மோசடியாக நியமனச் சீட்டை அழிப்பது; நோட்டீசுகளை அழிப்பது; வாக்குச் சீட்டுகளை அழிப்பது; அதிகாரமற்ற 'பாலட் பேபர்'களைக் கொடுப்பது; பாலட் பெட்டியில் வேறு சாமான்களைப் போடுவது; பாலட்பெட்டியை உடைப்பது; இவை குற்றமாகும். இதைச் செய்பவர் தேர்தல் அதிகாரியாக இருந்தால் இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். மற்றவர்களுக்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

சென்னை மேல் சட்ட சபை (Legislative Council) தொகுதிகள்

கல்விப் பட்டதாரிகள் தொகுதி

(Graduates Contituencies). ஸ்தானங்கள்.

சென்னை (தெற்கு) சென்னைசிடி, செங்கல்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி, மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்கள். 4

உபாத்தியாயர்கள் தொகுதி (Teachers Constituencies) சென்னை (தெற்கு) ஷை ஜில்லாக்கள் 4

ஸ்தல ஸ்தாபனங்கள் தொகுதி (Local Authorities Constituencies)

ஸ்தல ஸ்தாபனங்கள் :— மதராஸ் செங்கல்பட்டு, வடஆற்காடு ஜில்லாக்கள் 3

தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி ஜில்லாக்கள். 3

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள். 3

சேலம், கோயமுத்தூர், நீலகிரி. 3

பிழைத் திருத்தம்: 1951 அக்டோபர் 'வக்கீல்' இதழ் பக்கம் 16, 17-ல் தேர்தல் தொகுதிகள் என்ற தலைப்பில் முதுகுளத்தூர் தொகுதிக்கு மொத்த அங்கத்தினர்கள் 2 தான். சர்க்கார் கெஜட்டில் இப்பொழுது பிழை திருத்தம் பிரசுரம் செய்திருக்கின்றனர்.

"வக்கீல்" தேர்தல் மலர். 1951 டிசம்பர் "வக்கீல்" இதழ் "தேர்தல் மலரா"கப் பிரசுரம் செய்யப்படும். அரசியல் அமைப்புச் சட்டம், ஜனப்பிரதிநிதி சட்டங்கள், விதிகள், தேர்தல் தொகுதிகள், தேர்தல் அறிக்கைகள் முதலிய பல விஷயங்கள் அடங்கிய ஓர் அறிவு விருந்தாக இவ்விதழ் அமையும். அதிக பக்கங்கள் இருக்கும். விலை அணா 6 தான். சந்தாதார்களுக்கு வழக்கம்போல் தபாலில் அனுப்பப்படும்.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

அல்லது

இந்து மத-தர்ம பரிபாலனச் சட்டம் (1951)

[The Madras Hindu Religious and charitable Endowments Act 1951. சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1951-ஆம் வருடத்திய 19-ஆவது சென்னைச் சட்டம். 30—9—1951 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் "வக்கீல்" 1951 அக்டோபர் மாத இதழில் விளக்கப்பட்டன. இனி இச்சட்டத்தின் சில முக்கிய ஷரத்துக்கள் விஷய வாரியாகத் தொகுப்பட்டு சட்ட நுட்பங்களுடன் விளக்கப்பட்டு வருவதை நேயர்கள் கவனிக்கவும். அடுத்து வரும் இதழ்களிலும் இவ்விஷயம தொடரும்.]

எந்த விஷயங்களைப்பற்றி, சிவில் கோர்ட்டில் தாவா செய்யத் தடை?

நம்முடைய சொத்து சுதந்தரங்களைப் பற்றியாவது, நம்முடைய உரிமைகள் அல்லது பாத்தியங்களைப் பற்றியாவது, பதவி அல்லது உத்தியோகங்களைப்பற்றியாவது, நமக்கு எவ்விதமான பரிகாரம் கிடைக்கவேண்டுமானாலும் அதைக் குறித்து நாம், 'சிவில்' கோர்ட்டுகளில் வழக்குத் தொடர்ந்து பரிகாரம் தேடிக் கொள்ளும் உரிமை நம் யாவருக்கும் உண்டு. இது சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் கண்ட பொது விதி. சிவில் கோர்ட்டுகள் என்பது நமது டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட், சப்கோர்ட், ஜில்லா கோர்ட் முதலிய கோர்ட்டுகள். எல்லாவற்றிற்கும் மேலே ஹைகோர்ட்டும், அதற்குமேல் சுப்ரீம் கோர்ட்டும் இருக்கின்றன. நாம் கேட்கும் பரிகாரத்தைப் பற்றி எந்தக் கோர்ட்டில் தாவா போடவேண்டும், எவ்வளவு ஸ்டாம்பு கட்டவேண்டும் என்ற விஷயங்களைப் பற்றி, தனித்தனிச் சட்டங்களும் இருக்கின்றன. ஆனால் எந்த விதமான வழக்குகளையும் சாதாரண 'சிவில்' கோர்ட்டுகள் விசாரிக்கக் கூடாதென்று வேறு எந்தச் சட்டமாவது தடை செய்தால், அப்படித்தடை செய்யப்பட்ட விஷயங்களைப்பற்றி நாம் சாதாரண சிவில் கோர்ட்டுகளில் தாவா அல்லது வழக்குப்போட முடியாது. 'தடை' என்பது வியக்தமாக இருந்தாலும் சரி, மறைமுகமாக இருந்தாலும் சரி, அவ்விஷயங்களைப்பற்றி சாதாரண சிவில் கோர்ட்டுகள் எவ்வித வழக்குகளையும் ஏற்றுக் கொள்ளா. இவ்விதம் தடை செய்யும் சட்டங்களில் அறநிலையப் பாதுகாப்புச் சட்டமும் ஒன்று. மேற்கண்ட விதிப்படி சாதாரணமாய், 'சிவில்' கோர்ட்டுகளில் தாவா அல்லது வழக்குச் செய்து நாம் பரிகாரம் தேடிக்கொள்ளக்கூடிய சில விஷயகளைப்பற்றி, 'சிவில்' கோர்ட்டுகளில் நாம் பரிகாரம் தேடிக்கொள்வதை சென்னை இந்து மத-தர்ம பரிபாலனச் சட்டம் தடை செய்கின்றது. இத்தடை இச்சட்டத்தின் 93-ஆவது செக்ஷனில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் வாசகம்:—கோயில்கள், மடங்கள், கட்டளைகள் போன்ற மத ஸ்தாபனங்களின் பரிபாலனம் அல்லது நிர்வாகம் பற்றியாவது; இச்சட்டத்தில் எந்த எந்த விஷயங்களைப் பற்றியோ, சண்டை அல்லது தகராறுகளைப் பற்றியோ எவ்விதம் எந்த அதிகாரிகளிடம் அல்லது கோர்ட்டுகளிடம் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ, அதற்கு மாறாக, எவ்வித தாவா அல்லது நடவடிக்கைகளையும் சாதாரண 'சிவில்' கோர்ட்டுகள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று இதன் மூலம் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் செக்ஷன் 93. ஆகையால் இச் சட்ட ஷரத்துக்களின்படி எந்த எந்த விஷயங்களைப்பற்றி எந்த எந்த அதிகாரிகளிடம் பரிகாரம் தேடிக்கொள்ளலாமென்றும், அவைகளுக்கு இச்சட்டத்தால் குறிப்பிடப்பட்டிருக்கும் காலாவதி கெடு என்ன என்றும், ஸ்டாம்பு கட்டணம் எவ்வளவு என்றும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் உதவியைக் கொண்டு கவனிப்போம். 'கோர்ட்' என்றால் இச் சட்டப்படி எல்லா கோர்ட்டுகளையும் குறிப்பிடாது. இச் சட்டத்தில் 'கோர்ட்' என்றால் சென்னைச் சிட்டியில் உள்ள மடம் அல்லது கோயில்கள் அவை சம்பந்தமான கட்டளைகளைப்பற்றி சென்னைச் சிட்டி சிவில் கோர்ட் என்றும்; மற்ற இடங்களில் உள்ள கோயில்கள் அல்லது மடங்களைப்பற்றி அக்கோயில் அல்லது மடம் இருக்கும் இடங்களுக்கு அதிகாரமுள்ள சப்கோர்ட் என்றும் சப்கோர்ட் இல்லாவிட்டால் ஜில்லா கோர்ட் என்றும் தான் அர்த்தம். இரண்டு கோயில்கள் அல்லது மடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கட்டளைகளைக் குறித்து, அவை சம்பந்தமான மேற்கண்ட எல்லா கோர்ட்டுகளுக்கும் அதிகாரமுண்டு.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் என்ற சென்னை இந்து மத- மனுக்கள், அப்பீல்கள், ஸ்டாம்பு கட்டணம்

எந்தச் செக்ஷன்படி	எந்த விஷயத்தைப்பற்றி மனுக் கொடுக்கலாம்.	யார் மனுக் கொடுக்கலாம்.	யாரிடம் மனுக் கொடுக்கவேண்டும்.
18	டிப்டி கமிஷனர், உதவிக் கமிஷனர், பிரதேசக் கமிட்டி, கோயில் டிரஸ்டிகள் இவர்களுடைய எந்த உத்தரவுகளையும் வரவழைத்து அவை சரியா என்று பரிசிலனை (Revision) செய்யும்படி மனு. (இச் சட்டப்படி சிவில் கோர்ட்டுகளில் தாவா அல்லது அப்பீல் போட முடியாத விஷயங்களைப் பற்றித்தான் இம் மனுப் போடலாம்).	எவரும்	கமிஷனர்.
32(1)(3)	சொத்து ஜவாப்தாரியின் பேரில் ஒரு கோயில் அல்லது மடத்தில் செய்யவேண்டிய கட்டளையை, அச் சொத்தை வைத்திருப்பவர் செய்யாவிட்டால், அவர் அக் கோயிலுக்கோ, மடத்திற்கோ எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய மனு.	கோயில் அல்லது மடத்தின் டிரஸ்டி.	டிப்டி கமிஷனர்.
32(2)(3)	கட்டளை செய்யவேண்டியவர் ஒருவராக இருந்து, சொத்து வைத்திருக்கும் வேறு ஒருவர் அக்கட்டளையைச் செய்யத் தொகைகள் கொடுத்திருந்தால், அத் தொகையைச் சட்டப்படி கட்டளை செய்ய வேண்டியவரிடமிருந்து வசூல் செய்ய மனு.	சொத்து வைத்திருப்பவர்.	டிப்டி கமிஷனர்.
32 (4)	மேலே கண்ட செக்ஷன் 32(1) அல்லது 32(2)ன்படி டிப்டி கமிஷன் செய்த உத்தரவுப் படி அல்லது செக்ஷன் 32(3)ன்படி அப்பீலில் கமிஷனர் செய்த உத்தரவுப்படி கிடைக்க வேண்டிய தொகையை நில கிஸ்திபோல் வசூல் செய்து கொடுக்க வேண்டுமென்று மனு.	டிரஸ்டி அல்லது சொத்து வைத்திருப்பவர்.	ஜில்லா கலெக்டர்.
35 (2)	ஒரு மத ஸ்தாபனத்திற்குக் கொடுக்கப்பட்ட 'இனம்' நிலத்தை அல்லது பாத்தியத்தை சில காரணங்களினால் சர்க்காரே திருப்ப எடுத்துக் கொள்ளும்படி மனு.	டிரஸ்டி, கமிஷனர், டிப்டி கமிஷனர் அல்லது இவர்களின் சம்மதம் பெற்ற பற்றுள்ள எவரும்.	கலெக்டர் (ரிவன்யூ டிவிஷனல் ஆபீசர்.)
52 (1)	ஒரு மடாதிபதியை அல்லது மடத்தைச் சேர்ந்த ஒரு கட்டளை டிரஸ்டியைப் பதவியிலிருந்து நீக்க, சிவில் கோர்ட்டில் தாவா போடுவதற்காக அனுமதி கேட்கும் மனு.	மடத்தில், பற்றுள்ள இருவர் அல்லது அதிகமான நபர்கள் சேர்ந்து.	கமிஷனர்.
57 (a)	ஒரு ஸ்தாபனம் இச் சட்டப்படி ஒரு மத ஸ்தாபனமா என்று நிர்ணயம் செய்ய மனு.	பற்றுள்ள எவரும்.	டிப்டி கமிஷனர்.

*குறிப்பு:- அட்டவணையில் செக்ஷன் 35 (2) ல் கண்ட விஷயம் பற்றி ஜில்லா கலெக்டரின் அப்பீல் உத்தரவு தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள், 'இனம்' என்பது மேல் வாரம் குடிவாரம் இரண்டுமா அல்லது மேல் வாரம் மட்டுமா என்று நிர்ணயம் செய்ய சிவில் கோர்ட்டில் தாவா

தர்மபரிபாலனச் சட்டப்படி அதிகாரிகளிடம் கொடுக்கக்கூடிய முதலியன அடங்கிய விபரம்.

மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம்	யாரிடம் அப்பீல் கொடுக்கலாம்.	அப்பீல் கெடு.	அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம்.	இதே விஷயமாய் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமா?
ரூ. 10-0-0.	அப்பீல் கிடையாது. ஆனால் செக்ஷன் 99-ன்படி சர்க்காருக்கு ரிவிஷன் மனுக் கொடுக்கலாம்.			தாவாசெய்யமுடியாது.
ரூ. 2-0-0.	கமிஷனர்.	2 மாதம்.	ரூ. 5-0-0.	முடியாது.
ரூ. 2-0-0.	கமிஷனர்.	2 மாதம்.	ரூ. 5-0-0.	முடியாது.
	இல்லை.			முடியாது.
	ஜில்லா கலெக்டர்.	விதிகளால் நிர்ண்யம் செய்யப்படும் கெடு.		தாவா செய்யலாம் கீழே * குறிப்பு என்பதைப் பார்க்கவும்.
ரூ. 10-0-0.	சர்க்கார்.	3 மாதம்.	ரூ. 20-0-0.	அனுமதி கிடைத்தால் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். அல்லது கமிஷனரே தாவா செய்யலாம். தாவாவுக்கு ஸ்டாம்பு ரூ. 50.
ரூ. 15-0-0.	கமிஷனர்.	1 மாதம்.	ரூ. 25-0-0.	கமிஷனரின் உத்தரவை மாற்ற 90 நாட்களுக்குள் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம், தாவாவுக்கு ஸ்டாம்பு ரூ. 50. இதன்

செய்யலாம், ஜில்லா கலெக்டரிடம் அப்பீல் இல்லாவிட்டால் அப்பீல் செய்ய கெடு முடிந்த 6 மாதங்களுக்குள் மேல்கண்ட தாவா செய்யலாம்.

எந்தச் செக்ஷன்படி	எந்த விஷயத்தைப்பற்றி மனுக் கொடுக்கலாம்.	யார் மனுக் கொடுக்கலாம்.	யாரிடம் மனுக் கொடுக்கவேண்டும்.
57 (b)	ஒரு டிரஸ்டி பரம்பரை டிரஸ்டியாக இருக்கிறாரா, அல்லது இருந்தாரா என்று நிர்ணயம் செய்ய மனு.	பற்றுள்ள யாவரும்	டிப்டி கமிஷனர்
57 (c)	ஒரு சொத்தோ பணமோ, ஒரு மத ஸ்தாபனத்தைச் சேர்ந்ததா என்று நிர்ணயம் செய்ய மனு.	ஷை	ஷை
57 (d)	ஒரு சொத்தோ, பணமோ, ஒரு கட்டளையைச் சேர்ந்ததா என்று நிர்ணயம் செய்ய.	ஷை	ஷை
57 (e)	ஒரு மத ஸ்தாபனத்தில் ஒருவருக்கு மாமூல் படிக்கோ, வேறு வகையிலோ, எவ்வித உரிமை, மரியாதை அல்லது வரும்படி இருக்கிறதா, என்று நிர்ணயம் செய்ய; அல்லது ஒரு மத ஸ்தாபனத்தின் ஊர்ஜிதமான வழக்கம் என்ன என்று நிர்ணயம் செய்ய மனு.	ஷை	ஷை
57 (f)	ஒரு ஸ்தாபனம் அல்லது சொத்து முழுதும் மத சம்பந்தமானதா; அல்லது ஒரு பாகம் மத சம்பந்தமாயும், பாக்கி லௌகிக சம்பந்தமாயும் இருக்கிறதா; ஒரு சொத்து அல்லது பணம் முழுதுமோ, ஒரு பாகமோ, மத விஷயங்களுக்காகக் கொடுக்கப் பட்டிருக்கிறதா, அல்லது லௌகிக விஷயங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று நிர்ணயம் செய்ய மனு.	ஷை	ஷை
57 (g)	மத சம்பந்தமாயும் லௌகிக சம்பந்தமாயும் இரண்டும் கலந்துள்ள ஸ்தாபனங்களில் செய்ய வேண்டிய தர்மங்கள்; அல்லது இரண்டும் கலந்த தர்மங்கள்; இருவகைக் காரியங்களுக்கும் உபயோகப்பட்டுவரும் சொத்துக்கள் — இவைகளில் மத சம்பந்தமான காரியங்களுக்கு மட்டில் எவ்வளவு பாகம் ஒதுக்கப்படவேண்டுமென்று நிர்ணயம் செய்ய மனு.	ஷை	ஷை
58 (1)	ஒரு மத ஸ்தாபனத்திற்கு ஒரு 'ஏற்பாடு' (Scheme) வகுக்க வேண்டுமென்ற மனு.	பற்றுள்ள குறைந்தது 5 நபர்கள் சேர்ந்து	டிப்டி கமிஷனர்
58 (6)	ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட 'ஏற்பாட்டை' (Scheme) மாற்றவோ, ரத்து செய்யவோ மனு.	பற்றுள்ள எவரும்	ஷை
59 (1)	ஒரு மத ஸ்தாபனத்தின் காரியம் ஆதியிலிருந்தே நிறைவேற்ற முடியாமலிருந்தாலும் பிறகு நிறைவேற்ற முடியாமல் போய் விட்டாலும், அந்த ஸ்தாபனத்தின் சொத்தை, செக்ஷன் 59 (1) ல் கண்ட வேறு வகை உபயோகங்களுக்குச் செலவுசெய்யும்படி மனு.	ஷை	ஷை

மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம்.	யாரிடம் அப்பீல் கொடுக்கலாம்.	அப்பீல் கெடு.	அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம்.	இதே விஷயமாய் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமா!
ரூ. 15-0-0	கமிஷனர்	1 மாதம்	ரூ. 25-0-0	பேரில் ஹைகோர்ட்டுக்கு 90 நாட்களுக்குள் அப்பீல் உண்டு. அதற்கும் ஸ்டாம்பு ரூ. 50 ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ரூ. 50	கமிஷனர்	ஷை	ஷை	ஷை
ரூ. 25	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	தாவா போட முடியாது

எந்தச் செக்ஷன்படி.	எந்த விஷயத்தைப்பற்றி மனுக் கொடுக்கலாம்.	யார் மனுக் கொடுக்கலாம்.	யாரிடம் மனுக் கொடுக்கவேண்டும்.
59 (2)	மேற்கண்ட செக்ஷன் 59 (1) படி டிப்டி கமிஷனர் செய்த உத்தரவை மாற்றவும் ரத்து செய்யவும் மனு.	ஷை	ஷை
61 (2)	மேலே கண்ட செக்ஷன் 58, அல்லது 59 இவைகளின்படி டிப்டி கமிஷனர் செய்த உத்தரவின் பேரில் கமிஷனர் செய்யும் அப்பீல் உத்தரவுகளை மாற்றவோ, ரத்துச் செய்யவோ கமிஷனரிடமே கொடுக்கக்கூடிய மனு. (சிவில் கோர்ட்டில் தாவா செய்ய முடியாமலோ அல்லது கெடுவுக்குள் தாவா போடப்படாமலோ இருந்தால் தான் கமிஷனரிடமே இம்மனுக் கொடுக்கலாம்.)	ஷை	கமிஷனர்
64 (4)	ஒரு மத ஸ்தாபனத்தை 'அறிக்கை'யிடப்பட்ட ஸ்தாபனமாக (Notified Religious Institution) சர்க்கார் செய்ததை ரத்துச்செய்ய வேண்டுமென்ற மனு.	ஷை	சர்க்காருக்கே
99	கமிஷனர், டிப்டி கமிஷனர், உதவி கமிஷனர், பிரதேசக்கமிட்டி அல்லது டிரஸ்டிகள் செய்த எந்த உத்தரவுகளையும் நடவடிக்கைகளையும் பரிசீலனை (Revision) செய்ய மனு. (சிவில் கோர்ட்டில் தாவா அல்லது அப்பீல் செய்யக்கூடிய விஷயங்களைப்பற்றி இவ்வித மனுப் போட முடியாது.)	ஷை	சர்க்கார்
103 (f)	ஒரு மதஸ்தாபனத்தின் சொத்தை வேறு உபயோகம் செய்யும் விஷயமாய் பழைய சட்டத்தின் செக்ஷன் 67ன்படி செய்யப்பட்ட உத்தரவைத் திருத்தவோ ரத்துச் செய்யவோ	ஷை	டிப்டி கமிஷனர்
62 (3)	ஒரு மத ஸ்தாபனத்திற்குக் கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்ட 'ஏற்பாட்டை' (Scheme) மாற்றவோ ரத்துச் செய்யவோ	பாதிக்கப் பட்டவர்	கோர்ட்டிலேயே
87	ஒரு மத ஸ்தாபனத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட டிரஸ்டி எக்சிகூடிவ் ஆபீசர் அல்லது மானேஜர் அந்த ஸ்தாபனத்தையோ, அதன் சொத்தையோ, கணக்குகளையோ, தஸ்தாவேஜிகளையோ கொடுக்க மறுக்கும் நீக்கப்பட்ட அல்லது சஸ்பெண்டு செய்யப்பட்ட டிரஸ்டி அல்லது ஊழியர் அல்லது சிப்பந்தி இவர்களிடமிருந்தோ இவர்கள் மூலம் பாத்தியம் கொண்டாடுபவர்களிடமிருந்தோ தமக்கு சுவாதீனம் கிடைக்கவேண்டுமென்று மனுப்போடலாம்.	புதிய டிரஸ்டி, எக்சிகூடிவ் ஆபீசர் அல்லது மானேஜர்	ஸ்தாபனம் அல்லது சொத்து இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள எந்த முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடமும்

சென்னை இந்து மத தர்ம பரிபாலனச் சட்ட அதிகாரிகள் தஞ்சாவூரிலும் கோயமுத்தூரிலும் டிப்டி கமிஷனர்கள் இருப்பார்கள். இச்சட்டப்படி ஒரு கமிஷனரும், கோயமுத்தூர், தஞ்சாவூர், குண்டூர் இந்த மூன்று இடங்களிலும் 3 டிப்டி கமிஷனர்களும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். **கோயமுத்தூர்,** டிப்டி கமிஷனருக்கு கோயமுத்தூர், நீலகிரி, சேலம், மலையாளம், தென் கன்னடம், வட ஆற்காடு தென் ஆற்காடு, செங்கல்பட்டு மதராஸ் இந்த ஜில்லாக்களில் அதிகாரம் உண்டு. **தஞ்சாவூர்,** டிப்டி கமிஷனருக்கு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி இந்த ஜில்லாக்களில் அதிகாரம்.

மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம்.	யாரிடம் அப்பீல் கொடுக்கலாம்.	அப்பீல் கெடு.	அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம்	இதே விஷயமாய் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமா!
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	இல்லை			இல்லை
ரூ. 25				கிடையாது
ரூ. 25				ஷை
ரூ. 25	கமிஷனர்		ரூ. 25	ஷை
ரூ. 50	ஹைகோர்ட்டுக்கு	90 நாள்	ரூ. 50	
ரூ. 2				மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவால் பாதிக்கப் பட்டவர் சொத்தில் தமக்குள்ள பாத்தியத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ளத் தாவா செய்யலாம்.

(தொடரும்)

இந்து மத-தர்ம பரிபாலனச் சட்ட அதிகாரிகள்:—நியமனம். சென்னைச் சர்க்காரால் கீழே கண்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்:—**கமிஷனர்** - ஸ்ரீ T. M. சின்னய்யா பிள்ளை M.A., B.L., (30-9-1951 லிருந்து ஒரு வருடத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்) **தஞ்சாவூர் டிப்டி கமிஷனர்**—ஸ்ரீ A. S. மன்ணடி நாயர் B. A., B. L., **கோயமுத்தூர் டிப்டி கமிஷனர்** ஸ்ரீ N. வெங்கடராம அய்யர் (சென்னை ரெண்டு கண்ட்ரோலராக இருந்தவர்.) **குண்டூர் டிப்டி கமிஷனர்** — ஸ்ரீ. D. சூரியநாராயணஸ்வாமி (மசூலிப்பட்டணம் சப் ஜட்ஜாக இருந்தவர்.)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

இரண்டு பாகஸ்தர்களுக்குச் சொந்தமான பொதுக் கிணறு

[ஆதாரம் — 1951 — II. மதராஸ் லா ஜர்னல் - 343.]

சர்வே நம்பர் 309 இரண்டு பாகஸ்தர்களுக்குச் சொந்தமான நிலம். (எந்த ஊரில் என்பதையும், சொந்தக்காரர்களின் பெயரையும் நாம் கவனிக்க வேண்டியதில்லை) அதில் ஒரு கிணறு இருக்கிறது. இந்த நிலத்தையும் அதிலுள்ள கிணற்றையும் இப்பாகஸ்தர்களுடைய முன்னோர்கள் 1927 லேயே பாகம் செய்துகொண்டு விட்டனர். ஒரு பாகஸ்தர் இக்கிணற்றின் வடக்குப் பக்கத்திலிருந்து ஜலம் எடுத்துக் கொள்ளவேண்டியது; மற்றப் பாகஸ்தர் கிணற்றின் தெற்குப் பாகத்திலிருந்து ஜலம் எடுத்தக் கொள்ளவேண்டியதென்ற ஏற்பாடு பாகபத்திரத்திலேயே காணப்பட்டிருக்கிறது. இரு பாகஸ்தர்களும் சர்வே நம்பர் 309-ல் உள்ள தம் தம் பாக நிலத்தைச் சாகுபடி செய்யவே இக்கிணற்றின் ஜலத்தை எடுத்து உபயோகப்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றனர். இப்படி இருக்கும்போது, ஒரு பாகஸ்தர் சமீபத்தில் சர்வே நம்பர் 309-க்குப் பக்கத்திலுள்ள ஒரு நிலத்தை விலைக்கு வாங்கினார். பொதுக் கிணற்றின் ஜலத்தை இப்புது நிலத்திற்கும் பாய்ச்சி உபயோகப்படுத்த ஆரம்பித்தார். இதை மற்றப் பாகஸ்தர் தடுத்தார். சர்வே நம்பர் 309-ல் உள்ள நிலத்தைத் தவிர வேறு எந்த நிலத்திற்கும் இப்பொதுக் கிணற்றின் ஜலத்தை அவர் உபயோகப்படுத்தக் கூடாதென்று அப்பாகஸ்தரைத் தடுக்கக் கோர்ட்டில் தாவா செய்தார். கீழ்க் கோர்ட்டுகள் இரண்டிலும் வாதியின் தாவா தள்ளப்பட்டது. ஆனால் வாதி சென்னை ஹைகோர்ட்டில் செய்த இரண்டாவது அப்பீலில், அவருடைய கட்சி ஏற்றுக்கொள்ளப் பட்டது. சர்வே நம்பர் 309-ல் உள்ள பொதுக் கிணற்றின் ஜலம் அந்த சர்வே நம்பரில் உள்ள இரண்டு பாகஸ்தர்களின் நிலத்தை மட்டில் சாகுபடி செய்துகொள்ளவேதான் உபயோகப் படுத்தப்படவேண்டுமென்று பாகபத்திரம் அர்த்தம் செய்யப்படவேண்டுமென்றும்; நடைமுறையிலும் இதுவரை அப்படியேதான் இக்கிணற்றின் ஜலம் உபயோகப்பட்டு வந்திருக்கிறதென்றும் உயர் நீதிபதி கனம் சத்திய நாராயணராவ் அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். புதிதாக சர்வே நம்பர் 309—க்குப் பக்கத்தில் நிலம் வாங்கிய பாகஸ்தர், அப்புது நிலத்தைச் சாகுபடி செய்ய, சர்வே நம்பர் 309-ல் உள்ள கிணற்று ஜலத்தை எடுத்துக் கொள்ளக் கூடாதென்று தடை செய்யப்பட்டார்.

*   *   *

கணவன் இறக்கும்போது விபசார வாழ்க்கையிலிருக்கும் மனைவிக்கு சொத்துப் பாத்தியம் உண்டா?

[ஆதாரம் — 1951 — 2 — மதராஸ் லா ஜர்னல் — 314.]

ஒரு சிக்கலான சட்டப் பிரச்னை மூன்று நீதிபதிகள் அடங்கிய ஒரு நிறை மன்றத்தால்

தீர்க்கப்பட்டுள்ளது. இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம் 14-4-1937ல் அமுலுக்கு வந்தது. அதற்கு முன் இறந்த இந்து ஒரு பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்திருந்தால் அச்சொத்துக்களில் அவருடைய மனைவிக்கு ஜீவனும்சபாத்தியத்தைத் தவிர சொத்துரிமைக் கிடையாது. இறந்தவருக்குச் சுயார்ஜித சொத்துக்களோ தனிச் சொத்துக்களோ இருந்தாலும், அவருக்கு ஆண் சந்ததிகள் இருந்தால் மனைவிக்கு ஜீவனும்சபாத்தியம்தான்; சொத்தில் பாத்தியமில்லை. ஆனால் ஆண் சந்ததியில்லாமலும் தனி அல்லது சுயார்ஜித சொத்துக்களும் வைத்து இறக்கும் இந்துவின் அச்சொத்துக்களை பட்டில் அவருடைய மனைவியே வார்சாக அடைந்து வந்தாள். ஆனால் கணவன் இறக்கும்போது 'விபசார நடத்தை'யில் (Living in adultery) ஈடுபட்டிருக்கும் மனைவிக்கு ஜீவனும்ச பாத்தியமும் கிடையாது; வார்சு பாத்தியமும் கிடையாது. இதுதான் இந்துச் சட்டம்.

புதிய 1937-ஆம் வருடத்திய இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டப்படி இறந்த இந்துவின் எவ்விதமான சொத்துக்களிலும் அவருடைய மனைவிக்கு ஒருவகை வார்சு பாத்தியம் கொடுக்கப்பட்டது. இறந்த இந்துவானவர் ஒரு பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்திருந்தாலும் சரி, ஆண் சந்ததிகள் உடையவராக இருந்தாலும் சரி, இப்புதிய சட்டப்படி அவருடைய சொத்துக்களிலேயே மனைவிக்கும் ஒரு பாத்தியம் கொடுக்கப்பட்டது. பிரிபடாத குடும்பச் சொத்தில் இறந்த கணவனுக்கு என்ன உரிமை இருந்ததோ, அதே உரிமை அவருடைய விதவைக்கும் கொடுக்கப்பட்டது. கணவனுடைய மற்றச் சொத்துக்களில் ஆண் மகனைப்போலவே பாவித்து அவளுக்கும் ஜீவனும்சத்திற்கு பதிலாக ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. இது பழைய இந்து சட்டத்தால் அல்ல. புதிதாக இயற்றப்பட்ட சட்டத்தால். இப்புதுச் சட்டப்படி இறந்த கணவன் சொத்தில் மேற்சொல்லியபடி ஓர் உரிமை அடையக்கூடிய அவருடைய மனைவியானவள் கணவன் இறக்கும்போது விபசாரத்தில் ஈடுபட்டு, துர்நடத்தை உள்ளவளாக இருந்தால் அவளுக்கு அப்பொழுதும் வார்சு உரிமை உண்டா என்ற பிரச்னை இவ்வழக்கில் ஏற்பட்டது. புதிய சட்ட ஷரத்துக்களில் இதைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கப்படாமலிருப்பதால், கணவன் இறக்கும்போது விபசார வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் அவருடைய மனைவிக்கு இச்சட்டப்படி சொத்துரிமை உண்டென்று இவ்வழக்கில் வாதிக்கப்பட்டது. இக்கட்சியை நீதிபதிகள் நிராகரித்தனர். புதிய சட்டத்தால் பழைய இந்து சட்ட விதி பாதிக்கப்படவில்லை என்றும்; விபசார வாழ்க்கை நடத்தும் மனைவி புதிய சட்டப்படிக்கும் தம் கணவனுடைய சொத்துக்களுக்கு வார்சாக மாட்டாள் என்றும் மூன்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு அதன்படி இவ்வழக்கில் தீர்ப்புக் கூறினர்.

* * *

'பாலிய விவாக'த்திற்காகக் கொடுக்கப்பட்ட கடன் செல்லவில்லை; கடன் கொடுத்தவர் பணத்தை இழந்தார்.

[ஆதாரம் — 1951 — II — மதராஸ் லா ஜர்னல் — 264.]

ஒரு பிராமிசரி நோட்டு வழக்குத்தான். ஆனால் இதில் மிக ருசிகரமான சட்ட பிரச்னைகள் தெளிவு படுத்தப்பட்டன. சீனிவாச ராவ் பிராமிசரி நோட்டின் பேரில் கடன் கொடுத்த ரூ. 5000 மாவது அதன் வட்டியையாவது திரும்ப வாங்க முடியாமல் செய்துவிட்டது சட்டம்.

சீனிவாச ராவ் கடன் கொடுத்தது வேறு யாருக்குமில்லை. தம்முடைய மாமியாருக்கும் மைனர் மைத்துனருக்கும்தான் கடன் கொடுத்தார். அம்மைனர் மைத்துனருடைய கலியாணச் செலவுக்காகத்தான் இக்கடன் வாங்கப்பட்டது. மைனருடைய தாயாரே கார்டியன் முறைமையில் சீனிவாச ராவுக்கு ரூ. 5000-க்கு இப்பிராமிசரி நோட்டை எழுதிக் கொடுத்திருந்தாள். பிராமிசரி நோட்டின் அசல் வட்டித் தொகை ரூ. 5,956-2-6 தமக்குக் கிடைக்க வேண்டுமென்று சீனிவாச ராவ் அப்பொழுது மேஜராகிவிட்ட மைத்துனர் மீதும், அவன் தாயார் மீதும் தாவா செய்தார். சப்கோர்ட்டில் அவருடைய தாவா தள்ளப்பட்டது. ஹைகோர்ட்டில் அத்தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

காரணம்:—18 வயதிற்குட்பட்ட ஆண்கள் மணம் செய்து கொள்வது 'சாரதா சட்டம்'

என்று வழங்கும் பாலிய விவாகத் தடைச் சட்டத்தால் (Child Marriage Restraint Act - 1929) தடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு குற்றமுமாகும். சீனிவாச ராவ் கடன் கொடுத்தது 18-வயது பூர்த்தியாகாத தம் மைனர் மைத்துனரின் சட்ட விரோதமான கலியாணத்திற்காகவே. சட்ட விரோதமான கலியாணம் என்று தெரிந்தும் அதற்காக அவர் கடன் கொடுத்தார். சட்ட பூர்வமான காரியத்திற்காகச் (Lawful object) செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் தான் செல்லும். ஒப்பந்தங்களைப் பற்றிய இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் (Indian Contract Act) எந்த எந்த ஒப்பந்தங்கள் தான் செல்லுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்ட விரோதமான ஒரு காரியத்திற்காகச் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லா. பிராமிசரி நோட்டில் கடன் கொடுப்பதும் ஓர் வகை ஒப்பந்தமே.

ஆகையால் 'சாரதா' சட்டத்தை மீறும் ஒரு கலியாணத்திற்காகக் கடன் கொடுத்து சீனிவாச ராவ் எழுதி வாங்கிய 'பிராமிசரி நோட்' என்ற ஒப்பந்தம் செல்லாமல் போய்விட்டது. சீனிவாச ராவ் பணத்தை இழந்தார்.

* * *

விற்பனை வரிச் சட்டமும் கமிஷன் ஏஜண்டுகளும்

[ஆதாரம் — 1951 — 2 — மதராஸ் லா ஜர்னல் — 302.]

விற்பனை வரிச் சட்டம் என்பதே 'வியாபாரி' (Dealers) களுக்குத்தான் பொருந்துமென்றும் கமிஷன் ஏஜண்டுகள் 'வியாபாரிகள்' ஆகமாட்டார்களென்றும், ஆகையால் விற்பனை வரிச் சட்ட ஷரத்துக்களே கமிஷன் ஏஜண்டுகளைக் கட்டுப்படுத்தாவென்றும் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு வழக்கில் உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

(1950 (1) மதராஸ் லா ஜர்னல் 564-வது பக்கம் பார்க்கவும்.)

அத் தீர்ப்புக்குப் பின் வேறு சில விற்பனை வரி வழக்குகள் ஹைகோர்ட்டுக்குப் போயின.

விற்பனை வரிச் சட்ட ஷரத்துக்களின்படி சிலர்மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு அவர்கள் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டனர். அதன் பேரில் ஏற்பட்ட செஷன்ஸ் கோர்ட் அப்பீல்களும் அவர்களுக்கு விரோதமாயின. இவர்கள் சென்னை ஹைகோர்ட்டுக்குப் பரிசீலனை மனுக் கொடுத்தனர். தாங்கள் கமிஷன் ஏஜண்டுகள் என்றும் வியாபாரிகள் அல்ல என்றும் ஆகையால் விற்பனை வரிச் சட்டமே தங்களுக்குக் கிடையாதென்றும்; அச் சட்டப்படி வரி விதித்ததே பிசகென்றும் வாதாடினர். ஒரே வகையான பிரச்னை ஏற்பட்டதால் எல்லா வழக்குகளுக்கும் ஹைகோர்ட்டில் ஒரே தீர்ப்பு அளிக்கப்பட்டது. உயர் நீதிபதி கனம் பாஷியம் அகமது சையது அவர்கள் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்புகளைப் பரிசீலனை செய்து இவர்கள் 'கமிஷன் ஏஜண்டுகள்' தான் என்பதை ருசுப்படுத்தவில்லை என்றும்; விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8 இன்படி ஒருவர் கமிஷன் ஏஜண்டுதான் என்று ருசுப்பிக்க வேண்டியது அவருடைய பொறுப்பாகும் என்று காணப்பட்டிருப்பதால், அப்படி ருசுப்பிக்காமல் போகிறவர்களை 'வியாபாரி'களாகவே பாவித்து அவர்களுக்கு வரி விதித்து, வரி கொடுக்காவிட்டால் கிரிமினல் கேசில் அவர்களைத் தண்டிப்பது தவறாகாதென்றும், அபிப்பிராயப்பட்டு அவர்களுடைய அப்பீல்கள் தள்ளப்பட்டன. இவர்கள் கமிஷன் ஏஜண்டுகள் என்ற விஷயத்தைப்பற்றி, கீழ்க்கோர்ட்டில் ருசுவிட்டு ருசுப்பித்திருந்தால், அவர்களுக்கு விற்பனை வரி விதித்தது சரி அல்ல என்று ஏற்படும். ஆனால் என்றும் பிரஸ்தாப வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் அப்படி ருசுப்பிக்கவில்லை என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். இவ்விரண்டு தீர்ப்புக்களையும் சேர்த்துப் பார்க்கும்போது கீழே கண்ட நிலைமை ஏற்படுகிறது. அதாவது — கமிஷன் ஏஜண்டுகள் வியாபாரிகள் அல்ல; அவர்கள் விற்பனை வரி கொடுக்கவேண்டியதில்லை; கமிஷன் ஏஜண்டாக இருக்க விற்பனை வரிச் சட்டத்தின் 8-ஆவது செக்ஷன்படி இவர்கள் லைசென்சு வாங்கிக் கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை; ஆனால் விற்பனை வரி அதிகாரிகளிடமும் கோர்ட்டிலும் தாங்கள் 'கமிஷன் ஏஜண்டுகள்' தானே ஒழிய 'வியாபாரி'கள் அல்ல என்று ருசுப்பிக்கும் கடமை இக்கமிஷன் ஏஜண்டுகள் மீதுதான் இருக்கிறது; 'கமிஷன் ஏஜண்டு' என்று ருசுப்பிக்காதவர்களையும், அவ்வித ருசு விட்டும் ருசு நம்பப்படாதவர்களையும், 'வியாபாரி'களாகவே பாவித்து விற்பனை வரி விதிக்க, வரி அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. இவர்கள் 'கமிஷன் ஏஜண்டு' என்பதுபற்றி விற்பனை வரி அதிகாரிகளிடம் கொடுக்கும் ருசு போதாமலோ நம்பப்படாமலோ, அவர்கள் வரி விதிக்கப்பட்டால், அவ்வித ருசுவைக் கோர்ட்டில் காண்பித்துத் தாங்கள் கமிஷன் ஏஜண்டுகள் தான் என்று ஸ்தாபித்துக் கொள்ளவும் இவர்களுக்கு உரிமை உண்டு என ஏற்படுகிறது.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

குறிப்பு: 1951 செப்டம்பர் மாதத்தில் நேயர்கள் "வக்கீல்" பத்திரிகைக்கு அனுப்பிய கேள்விகளிலிருந்து, கீழே கண்ட கேள்விகள் மட்டில் இப்பகுதியில் பதில் சொல்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு பதில் அபிப்பிராயமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கேள்விகள் அனுப்பிய நேயர்களும் 1951 செப்டம்பர் மாதத்திற்கு முன் அனுப்பி, பதில் சொல்லப்படாத கேள்விகளை அனுப்பிய நேயர்களும் மேலேகண்ட விதிகளுக்கிணங்க, கேள்விகளை அமைத்து மறுபடி எழுதினால் "வக்கீல்" கேள்வி—பதில் பகுதியில் சேர்த்துக்கொள்வது சாத்தியமாகும். 1951 டிசம்பர் "வக்கீல்" இதழ் தேர்தல் விசேஷ இதழாக வெளிவருமாதலால்—டிசம்பர் மாத இதழில் அரசியல் அமைப்பு-சட்ட சபைகள் அமைப்பு-வாக்காளர் ஜாப்தா-ஓட்டுப்போடுவது முதலிய தேர்தல்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் தான் பதில் அளிக்கப்படும். தயவு செய்து இம்மாதம் மட்டில் அவ்விதமான கேள்விகளையே அனுப்பவும்.

---

95. **கேள்வி:** (ராதாகிருஷ்ண செட்டியார்-தஞ்சாவூர். ஜி.) போலீஸ் கான்ஸ்டபில் 'மப்ட்டி' டிரஸ்ஸில் இருக்கும் போது, பஞ்சாயத்து எல்லைக்கு அப்பால் பட்ட இடத்தில் ஒரே சைகிளில் இருவர் ஏறிப் போவதை, சார்ஜ் செய்யச் சட்டப்படி இடமிருக்கிறதா? பஞ்சாயத்து ஜனத்தொகை 9623.

பதில்: சென்னைப் போக்கு வரத்து விதிகளின் (Madras Traffic Rules 1938) 39-ஆவது விதிப்படி—சென்னை ஸிட்டியிலும் முனிசிபாலிட்டிகளின் எல்லைக்குள்ளும் தான் ஒரே சைகிளில் இருவர் போவது தடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் ஒரு சைக்கிளில் ஒருவருக்குமேல் போவது தடுக்கப் படவில்லை. இவ்விதியை மீறுகிறவர்களை 'மப்டி'யில் இருக்கும் போலீஸ்காரர்களும் சார்ஜ் செய்யலாம்.

96. **கேள்வி:** (அப்துல் மஜீது—திருவிடாச்சேரி) எஸ்டேட் (வார்சு) வரி என்றால் என்ன? இவ்வரி யாரை எந்த அளவில் எவ்வகைகளில் பாதிக்கும்?

பதில்: ஒருவர் இறந்தபின், அவருடைய சொத்துக்களின் மீது விதிக்கப்படும் வரிக்கு 'எஸ்டேட்' வரி என்று பெயர். இறந்தவருடைய சொத்தை அடையும் வார்சுகள் இவ்வரியைக் கொடுக்கவேண்டியவர்கள். பொறுக்குக் கமிட்டியால் திருத்தப்பட்ட எஸ்டேட் வரி மசோதா 24—5—1949-தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது.

97. **கேள்வி:** (வெங்கடேசன்-மன்னார்குடி ஒரு தொழிலாளி ஒரு வருடத்திற்குமேல் ஒரே இடத்தில் வேலை பார்க்கிறார். ஆனால் அவ்விடம் தினசரிச் சம்பளம் கொடுத்து விடுகிறார்கள். தொழிலாளி சில நாட்களுக்கு வேலைக்குப் போகவில்லை. வேலை செய்த நாட்களுக்கு மட்டில் சம்பளம் கொடுக்கப்படுகிறார். அத்தொழிலாளிக்குத் தொழிற்சாலைச் சட்டப்படி 20 நாட்களுக்கு 1 நாள் வீதம் லீவு நாட்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பக ...
182713
600008

சம்ப[illegible]உரிமை [illegible]ண்டா? பிரிவிலேஜ் லீவு [illegible]

பதில்: தொழிலாளர் இஷ்டப்பட்ட நாட்களில் மட்டில் வேலை செய்து இஷ்டப்படாத நாட்களில் தாமே வேலைக்குப் போகாமலும் இருந்தால், இவர் "தொடர்ந்த 12 மாதங்களுக்கு" வேலையில் அமர்ந்தவர் ஆக மாட்டார். இவருக்குத் தொழிற்சாலைச் சட்டத்தில் கண்ட சம்பளத்துடன் கூடிய லீவு நாட்கள் ஒன்றும் கிடையாது. தொழிற்சாலைச் சட்டம் செக்ஷன் 79—விவரணம் 1-பார்க்கவும்.

98. **கேள்வி:** (மாரியப்பா—சென்னிமலை) யூனியன் பார்லிமெண்டுக்கும், சென்னை ராஜ்ய அசெம்பிளிக்கும், அபேட்சகராக நிற்க எவ்வளவு ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டும்.

(இரு சபைகளுக்கும் வாக்காளர்கள் ஓட் செய்யும் முறையைத் தாங்கள் "வக்கீல்" மூலம் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.)

பதில்: டில்லி யூனியன் பார்லிமெண்ட் சபைக்கு நிற்க ரூபாய் 500-ம், சென்னை சட்ட சபைக்கு நிற்க ரூபாய் 250-ம், டிபாசிட்கட்ட வேண்டும். ஷெடியூல் ஜாதி அபேட்சகர்கள் இதில் பாதிதான் கட்ட வேண்டும்.

(இரு சபைகளுக்கும் 'ஓட்' செய்யும் முறை உள்படத் தேர்தல் சம்பந்தமான எல்லாச் சட்ட விஷயங்களும் 1951 டிசம்பர் "வக்கீல்" தேர்தல் விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்படும்.)

99. **கேள்வி:** (பாலசுப்பிரமணியம் — சேத்தியாதோப்பு.) 1951 செப்டம்பர் "வக்கீல்" இதழ் 17-ஆம் பக்கம் 'வழக்கும்—தீர்ப்பும்' என்ற பகுதியில் "பொல்லாத மரங்கள்" என்ற தீர்ப்பு கவர்ன்மெண்ட் அல்லது ஜில்லா போர்டுக்கு சம்பந்தப்பட்ட மரங்களுக்கும் பொருந்துமா?

பதில்: பொருந்தும்.

100. **கேள்வி:** (கணேசன்—குலமாணிக்கம்) ஒரு இந்து தம் பெண்சாதியின் அனுமதியின்றி, சுவீகாரம் எடுத்துக் கொண்டால் செல்லுமா?

பதில்: செல்லும்.

101. **கேள்வி:** (லெக்ஷ்மண முதலியார்—திருப்பத்தூர்) இந்து சட்டப்படி, மணமான இரண்டாம் மனைவி வாழ்க்கை வாழாமல் தாய் வீட்டில் இருந்து 35 ஆண்டுகள் கழித்து, கணவன் இறந்தால், அவளுக்குப் புருடன் சொத்தில் வார்சு பாத்தியம் உண்டா? முதல் மனைவியும் அவளுக்கு ஆண் பிள்ளைகளும் உண்டு.

பதில்: இரண்டாவது மனைவிக்கும் வார்சு பாத்தியம் உண்டு.

102. **கேள்வி:** (கே. எஸ். நாதன்—கொழும்பு) ஒரு தொழிலாளி ஒரு முதலாளியின் கடையில் வேலை பார்க்கிறார். தொழிலாளி கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்களிடம் வேலை வாங்கி, அதற்குரிய கூலி பெறுகிறார். முதலாளியிடமிருந்து சம்பளம் கிடையாது. ஆனால் கடைச்சிப்பந்தியாக ஷாப் சட்ட புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கிறார். இம்மாதிரி நிலையில் தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியத்திலிருந்து, கமிஷன் பெற முதலாளிக்கு உரிமை உண்டா?

பதில்: இது விஷயமாக இருவருக்கும் ஏதாவது ஒப்பந்தங்கள் இருந்தால், அதன்படி முதலாளி கமிஷன் வாங்கலாம். இதற்கும் ஷாப் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை.

103. **கேள்வி:** (தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர் சங்கக் கிளை காரியதரிசி—ஆத்தூர்) வரப்போகும் தேர்தலில் கிராம உத்தியோகஸ்தர்கள் (கர்ணம், கிராம முன்சீப்) இவர்கள் யூனியன் பார்லிமெண்ட், சென்னைச் சட்ட சபைகள் முதலியவைகளின் அங்கத்தினர் ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாக நிற்கலாமா? அவர்கள் தேர்தலில் நிற்கத் தடை ஏதாவது உண்டா?

பதில்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் (Constitution of India) ஆர்டிகள் 102, 191 இவைகளின்படி சர்க்கார் சம்பளம் வாங்கும் எந்த உத்தியோகஸ்தரும் அபேட்சகர்களாக நிற்க முடியாது; ஆனால் பார்லிமெண்டோ ராஜ்ய சட்ட சபையோ விதிவிலக்கு அளிக்கலாம். கர்ணம் அல்லது கிராம முன்சீப்களுக்கு இதுவரை இவ்வித விதிவிலக்கு அளித்த சட்டம் ஏதவும் ஏற்படவில்லை.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:* —V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

விஜயா ஔஷத சாலை,
1. சக்கரபாணிகோயில் வடக்கு வீதி,
கும்பகோணம்.

[Effective treatment GUARANTEED for chronic and acute diseases — Specialist in the treatment of Leprosy of any type, Asthma, Diabetes, Piles, Epilepsy, Whooping cough, and Nervous Debility.]

1. பூர்ண சந்திரோதய மகரத்வஜம்
க்ஷயம், தாதுபலஹீனம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒப்பற்றது.
ஒரு விராகனிடை ரூ. 30-0-0

2. விஜயா காயகல்பம்
சிறந்த யௌவனமளிக்கும் டானிக் உணவு. 15 நாள் உபயோகம்.
1 பௌண்டு பாட்டில் ரூ. 4-0-0

3. ஜீவாக்னிரஸம்
ஜலதோஷம், ஜுரம், ஜன்னி முதலியவைகளுக்குச் சிறந்தது.
20 மாத்திரை பாட்டில் 1க்கு ரூ. 1-0-0

4. கக்குவான் மருந்து
கக்குவானுக்கும் இருமலுக்கும் கைகண்ட மருந்து. 1 தோலா ரூ. 1-0-0

5. விஜயா ஆயின்டுமெண்டு
அக்கி, கரப்பான், சொறி, சிரங்கு, புண், புரை, காயம் முதலியவைகளுக்குச் சிறந்தது. பாட்டில் 1க்கு ரூ. 0-12-0

6. சவனப்ராசம் **7. வில்வாதி லேகியம்**	1 சேர் டின் ரூ. 3-8-0 ½ சேர் டின் ரூ. 1-12-0
8. அஸ்வகந்தி ரஸாயனம் **9. ஸௌபாக்ய சுண்டி**	1 சேர் டின் ரூ. 3-0-0 ½ சேர் டின் ரூ. 1-8-0

10. தாமரைத் தைலம்
11. குமரித் தைலம்
12. கருஞ்செம்பைத்தைலம்
13. ப்ருங்காமலக தைலம்
5 oz. பாட்டில் ரூ. 1-8-0

14. க்ஷீரபலாத் தைலம்
2 oz. பாட்டில் ரூ. 1-2-0

தவிர செந்தூரங்கள் பஸ்பங்கள் லேகியங்கள் தைலங்கள் க்ருதங்கள் முதலியவை சிறந்த ஆயுர்வேத முறைப்படி தயார்செய்து சரஸமான விலைக்குக் கொடுக்கப்படும்.

ஏஜண்டுகள் தேவை

ஆயுர்வேத ரத்னம் R. ராமானுஜாச்சாரியார்.
(Regd. Ind. Medical Practitioner.)

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மீபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

301.

Regd. No. M. 5399 "THE VAKIL"

OFFICE OF THE ... MADRAS NOV 1951

ஸ்தாபிதம் 1909, போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

குமபகோணம்.



பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TDF.